**இலங்கை வங்கி - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னாள் நிதி அமைச்சரின் கட்டளையொன்றின் மூலம் குறித்த நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கி மற்றும் தொகுதியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கி மற்றும் தொகுதியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தொகுதியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- தொகுதியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- தொகுதியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கூட்டு நட்டக்கழிவை கணிப்பீடு செய்வதற்கு வங்கி மென்பொருளை கொள்வனவு செய்திருந்த போதிலும் தவணை தப்பிய வெளிப்படுத்துகை (EAD) மற்றும் எதிர்பார்க்கப்படும் கடன் நட்டம் (ECL) தொடர்பான சீராக்கங்கள் இன்னும் கைமுறையாகச் செய்யப்படுகிறது. | முறைமையை அமுல்ப்படுத்துதல் ஆரம்ப நேரடி இயக்கத்தில் உள்ளதால், ஒரு இணையான இயக்கமாக, நாங்கள் கைமுறையாகவும் முறைமை மூலமாகவும் கணிப்பீடுகளைச் செய்கின்றோம். முறைமை கணிப்பீடுகள் எமக்கு வசதியாக இருக்கும் போது, கைமுறையான கணிப்பீடுகள் நிறுத்தப்படும். | எந்தவொரு கைமுறையான பயன்பாடும் இல்லாமல் முறைமை மூலம் EAD மற்றும் ECL கணிப்பீடுகளைச் செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | ”நிலை 3” கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ், நீடித்தல், கொடுப்பனவை பிற்போடுதல், விட்டுவிடுதல் தீர்ப்பனவு (மீளப்பட்டியலிடப்பட்ட மற்றும் மறுசீரமைக்கப்பட்ட) உள்ளடங்கிய சலுகைகளை விளைவிக்கக்கூடிய விதிமுறைகளை மாற்றியமைத்தல் இனங்காணப்பட வேண்டிய போதிலும் முக்கிய வங்கியியல் முறைமையில் மறுசீரமைக்கப்பட்ட வசதிகளை கையகப்படுத்துவதற்கு வங்கிக்கான எந்தவொரு பொறிமுறையும் காணப்படவில்லை. ஆகையால் 2018 திசெம்பர் 31 இல் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமம் - SLFRS 09 ஐ அமுல்ப்படுத்துவதன் அடிப்படையில் உரிமம் பெற்ற வங்கிக்கான வழிகாட்டலின் பிரகாரம் வங்கியின் நட்டக்கழிவு ஏற்பாட்டை கணிப்பீடு செய்யும் போது அத்தகைய மறுசீரமைக்கப்பட்ட வசதிகளைக் கருத்தில் | மறுசீரமைக்கப்பட்ட வசதிகளை இனங்காணும் பொறிமுறை உருவாக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. | வங்கிக்குள் மறுசீரமைக்கப்பட்ட கடன்களை கையகப்படுத்தும் முறைமையை விரைவாக அமுல்ப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கான வழி எதுவும் காணப்படவில்லை. | | |
| (iii) | உண்மையான நட்டம் கொடுக்கப்பட்ட தவணை தப்பிய விகிதங்களை (LGDs) பயன்படுத்துவதற்குப் பதிலாக, கடன் அட்டை மற்றும் வங்கி மேலதிகப்பற்று என்பவற்றிற்கான 45 சதவீத நட்ட விகிதத்தை வங்கி கருத்தில் கொண்டிருந்தது. | உண்மையான LGD ஐ கணிப்பீடு செய்வதற்கான தரவு காணப்படாததன் காரணமாக கடன் அட்டை மற்றும் OD இற்காக CBSL பணிப்புரை செய்த 45% LGD ஐ வங்கி பயன்படுத்துகிறது. இவ் விடயம் அதிகரித்திருந்ததுடன் கிடைக்கக்கூடிய தரவைக் கருத்தில் கொண்டு பொருத்தமான மாதிரியை உருவாக்குவதற்கு பணிபுரிகிறது. | உண்மையான நட்டம் கொடுக்கப்பட்ட தவணை தப்பிய விகிதங்களை (LGDs) பயன்படுத்துவதற்குப் பதிலாக, கடன் அட்டை மற்றும் வங்கி மேலதிகப்பற்று என்பவற்றிற்கான 45 சதவீத நட்ட விகிதத்தை வங்கி கருத்தில் கொண்டிருந்தது. |
| (iv) | குறைந்த பட்சம் மாதாந்தம்/காலாண்டு/வருடாந்தம் என்ற அடிப்படையில் அடிக்கடி தொடர்பு உத்தியோகத்தர்களால் (relationship officers) வழங்கப்படும் காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்களை மீண்டும் சோதனை செய்வதற்கான செயன்முறையை முகாமைத்துவம் அமுல்ப்படுத்த வேண்டும். பின் சோதனை என்பது எதிர்வுகூறல்களை தேறிய விளைவுகளுடன் ஒப்பீடு செய்வதாகும். தேறிய பெறுமதிகளிற்கு எதிரான எதிர்வுகூறல்களின் ஒப்பீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள மாதிரியொன்றின் எந்தவொரு சரிபார்ப்பையும் குறிப்பிடுவதற்கு பின் சோதனை பயன்படுத்தப்படுகிறது. இது தொடர்பாக, முகாமைத்துவம் முன்னைய காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட காசுப்பாய்ச்சல்களை வங்கிக்கு அனுப்பப்பட்ட உண்மையான காசுப்பாய்ச்சல்களுடன் ஒப்பீடு செய்யலாம். விலகல்கள் இருந்தால், நடைமுறை ஆண்டின் நட்டக்கழிவு | கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும், எதிர்வுகூறப்பட்ட எதிர்பார்க்கப்படும் காசுப்பாய்ச்சல்களின் நம்பகத்தன்மை மீதான மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும், மூல மதிப்பீடுகளிற்கான ஏதேனும் மாற்றங்களுக்காக அவற்றிற்குத் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கும் தொடர்பு உத்தியோகத்தர்கள்/ கடன் உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்படுகிறன. | குறைந்த பட்சம் மாதாந்தம்/ காலாண்டு/ வருடாந்தம் என்ற அடிப்படையில் அடிக்கடி தொடர்பு உத்தியோகத்தர்களால் வழங்கப்படும் காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்களை மீண்டும் சோதனை செய்வதற்கான செயன்முறையை முகாமைத்துவம் அமுல்ப்படுத்த வேண்டும். பின் சோதனை என்பது எதிர்வுகூறல்களை தேறிய விளைவுகளுடன் ஒப்பீடு செய்வதாகும். தேறிய பெறுமதிகளிற்கு எதிரான எதிர்வுகூறல்களின் ஒப்பீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள மாதிரியொன்றின் எந்தவொரு சரிபார்ப்பையும் குறிப்பிடுவதற்கு பின் சோதனை பயன்படுத்தப்படுகிறது. இது தொடர்பாக, முகாமைத்துவம் |

| | | | |
|---|---|---|---|
| | கணிப்பீட்டு நோக்கங்களுக்காக தொடர்பு உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்களில் உள்ள "பிழை விகிதத்திற்கு" சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | | முன்னைய காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட காசுப்பாய்ச்சல்களை வங்கிக்கு அனுப்பப்பட்ட உண்மையான காசுப்பாய்ச்சல்களுடன் ஒப்பீடு செய்யலாம். விலகல்கள் இருந்தால், நடைமுறை ஆண்டின் நட்டக்கழிவு கணிப்பீட்டு நோக்கங்களுக்காக தொடர்பு உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்களில் உள்ள "பிழை விகிதத்திற்கு" சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (v) | IFRS சீராக்கத்திற்காக 3 மாதங்கள் வரையான வட்டி வருமானத்தை மாத்திரமே வங்கி இனங்காணுகின்றதுடன் Kalypto முறைமையைப் பயன்படுத்தாமல் கைமுறையாக இச் சீராக்கத்தை வங்கி கணிப்பிட்டமை அவதானிக்கப்பட்டது. | வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் 3 மாதங்கள் வரையான வட்டியை வங்கி இனங்காணுகின்றதுடன் இது நட்டக்கழிவு கணிப்பீடுகளிற்கு சேர்க்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது இச் செயன்முறை கைமுறையாக கையாளப்படுகிறதுடன் இச் செயன்முறை தானியங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு முறைமை விற்பனையாளரிடம் இவ் விடயங்கள் கலந்துரையாடப்படும். | IFRS சீராக்கத்தின் பிரகாரம் வருமான கூற்றிற்கான வட்டி வருமான இனங்காணல் செயன்முறையை தானியக்கப்படுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்/ ஏடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சில முறைமை தவறுகள் காரணமாக பொது பேரேட்டு மீதிக்கும் வங்கி வியாபார நிதி முறைமையின் நிலுவை மீதிகளுக்கும் இடையே ரூபா | நீண்ட காலமாக நிலுவையாக உள்ள இந்த உருப்படிகள் 2006 ஆம் ஆண்டிலிருந்து அறிக்கையிடப்பட்டிருந்தன. வங்கி இந்த உருப்படிகளை | பொதுப் பேரேடு மற்றும் உப முறைமைகளுக்கு இடையே உள்ள மீதிகளை அடிக்கடி கணக்கிணக்கம் |

| | | | |
|---|---|---|---|
| | 397,565,454 வேறுபாடு அறிக்கையிடப்பட்டுள்ளது. | கணக்கிணக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதுடன் ஒவ்வொரு உருப்படியையும் ஒவ்வொரு பிரச்சனையின் அடிப்படையில் கணக்கிணக்கம் செய்ய வேண்டும். ஆகையால் இப்பணிக்கு கூடுதலான கால அவகாசம் தேவைப்படும். மேலும், வங்கி அதற்கேற்ப இக் கணக்குகளுக்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. | செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | AMT Rec கொடுப்பனவு பொதுப் பேரேட்டு மீதிக்கும் ECL பொழிப்பு தாள் மீதிக்கும் இடையே ரூபா 4,163,088 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது. வேறுபாடுகளுக்கான காரணத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் ஏதேனும் வேறுபாடுகள் இருந்தால் தேவையான திருத்தம் மேற்கொள்ளப்படும். | AMT Rec கொடுப்பனவு பொதுப் பேரேட்டு மீதிக்கும் ECL பொழிப்பு தாள் மீதிக்கும் இடையே உள்ள வேறுபாட்டை சீர்செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iii) | மாலே கிளை தொடர்பாக ECL பொழிப்பு அறிக்கைக்கும் நட்டக்கழிவு கணிப்பீட்டு தாளுக்கும் இடையே ரூபா 236,941,644 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது. வேறுபாடுகளுக்கான காரணத்தை இனங்காண்பதற்கு மாலே கிளையுடன் தேவையான கணக்கிணக்கத்தை நாங்கள் செய்வோம், மேலும் வேறுபாடுகள் இருந்தால் திருத்தம் செய்யப்படும். | மாலே கிளை தொடர்பாக ECL பொழிப்பு அறிக்கை மீதிக்கும் நட்டக்கழிவு கணிப்பீட்டு தாள் மீதிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை சீர்செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

### 1.5.3 தொங்கல் கணக்குகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | தலாவ, கூட்டுத்தாபனம், வெல்லவாய, மெற்றோபொலிற்றன் மற்றும் மதுகம ஆகிய கிளைகளில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 10,698,567, ரூபா 96,519, ரூபா 5,533,144, ரூபா 1,731,086 மற்றும் ரூபா 2,354,000 ஆகிய நீண்ட காலமாக நிலுவையாகவுள்ள தொங்கல் கணக்கு கடன்பட்டோர் மீதிகள் | தலாவ கிளை<br>தலாவ கிளையின் ரூபா 10,698,567 – காப்புறுதி கோரிக்கைகள் பெறப்பட்டு, சட்டப்பூர்வ கருத்துரைகளை கோரியிருந்ததால், கிளை அதற்கிணங்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சட்டப்பூர்வ கருத்துரை இறுதி செய்யப்பட்டதும், நிலுவையாக உள்ளவற்றை | நீண்ட காலமாக நிலுவையாக உள்ள தொங்கல் கணக்கு கடன்பட்டோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

காணப்பட்டன. 03 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே கணக்குகளில் அம் மீதிகள் உள்ளதுடன் அந்தந்த கிளைகளால் நீண்டகால நிலுவை மீதிகளை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

தெளிவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை கிளை மேற்கொள்ளும்.

கூட்டுத்தானம்
சீனா தேசிய விமான தொழில்நுட்ப பொறியியல் கூட்டுத்தாபன கணக்கில் (கணக்கு 71069025) வைப்பு செய்து திரு. ஆர் எச் சீ பிரசங்காவின் பெயரிற்கு 2016.04.08 இல் அக்குரஸ்ஸ கிளையில் உள்ள மற்ற வங்கிக்கு இரண்டு முறை பணம் செலுத்தியதற்கான கொடுப்பனவு சீட்டு பிரதி காரணமாக உருப்படி நிலுவையாக உள்ளது. இது தொடர்பாக வாடிக்கையாளரைப் பார்வையிடுவதற்கு கிளை ஏற்பாடு செய்துள்ளதுடன் பிழையை சீர்செய்யும்.

வெல்லவாய கிளை
H/C 142/2019 ஆம் இலக்க நீதிமன்ற வழக்கு இருப்பதால் வெல்லவாய கிளையின் ரூபா 5,553,144 நிலுவையாக உள்ளது.

மெற்றோபொலிற்றன்
ரூபா 1,731,085 தொகையை விட்டுவிடுவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு 12.11.2021 இல் கணக்கு தீர்வு செய்யப்பட்டது.

மதுகம கிளை - O/S
தேவையான நடவடிக்கையை மதுகம கிளை மேற்கொள்ளக்கூடியவாறு சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியின் போது குறிப்பிட்ட வாடிக்கையாளர் வெளிநாட்டில் வசித்துள்ளார் என்பதற்கான சான்றாதாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பொலிஸ் முறைப்பாடொன்று

| | | | |
|---|---|---|---|
| | | தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதுவரை நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. | |
| (ii) | தொங்கல் கணக்கு கடன்பட்டோர் - தலைமை அலுவலகத்தில் உள்ள நிர்வாக சேவை கணக்கில் ரூபா 11,139,311 மீதியொன்று உள்ளது, இது 1 முதல் 3 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நீண்டகால நிலுவை மீதியாக உள்ளது. உரிய அதிகாரிகளால் நீண்டகாலமாக நிலுவையாக உள்ள மீதிகளை தெளிவுபடுத்தவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய ஆவணங்களைப் பெற்ற பின்னர் பெரும்பாலான மீதிகள் 2021 திசெம்பர் 31 இற்கு முன்னர் திரும்பப் பெறப்படும். | தொங்கல் கணக்கு கடன்பட்டோர் - தலைமை அலுவலகத்தில் உள்ள நிர்வாக சேவை கணக்கு மீதியை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

**1.6.1 செலுத்த வேண்டியவைகள்**

---

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஏனைய பொறுப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பின்வரும் கணக்குகள் குறிப்பிடத்தக்களவு காலப்பகுதியிலிருந்து நீண்டகால நிலுவை மீதிகளைக் கொண்டுள்ளன. நீண்ட காலமாக நிலுவையாக உள்ள மீதிகளை தீர்வு செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய மீதிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | <u>FX சேகரிப்பிற்காக (வத்தளை கிளை) அனுப்பப்பட்ட காசோலைகள்</u><br>வத்தளை கிளை தேவையான சம்பிரதாயங்களை பூர்த்தி செய்த பின்னர் குறித்த மீதியை பதிவழிக்கும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளது.<br><br><u>உரிமை கோரப்படாத மீதிகள் கணக்கு (கரைகடந்த வங்கி)</u><br>ஈரானியத் தடைகள் காரணமாக கணக்கை மேலும் செயற்படுத்த முடியாததால் உரிய அங்கீகாரத்துடன் உரிமை கோரப்படாத | ஏனைய பொறுப்புக் கணக்குகளின் நீண்டகால நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| பொ. பே. கணக்கு பெயர் | கிரய நிலையம் | தொகை (ரூபா) | குறிப்புக்கள் |
|---|---|---|---|
| FX சேகரிப்பிற்காக அனுப்பப்பட்ட காசோலைகள் | 505 (வத்தளை கிளை) | 157,870 | இம் மீதி 2013 ஆகஸ்ட் 15 முதல் வருகின்ற வாடிக்கையாளர் வரவு மீதியொன்றாக இக் கணக்கின் கீழ் உள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| உரிமை கோரப்படாத மீதிகள் கணக்கு | 726 (கரைகடந்த வங்கி பிரிவு) | (617,924,477) | இம் மீதி 8 வருட காலத்திலிருந்து இக் கணக்கின் கீழ் வருகிறது. | மீதிக் கணக்கிற்கு மீதி மாற்றப்பட்டது.<br><br><u>பங்குபற்றல் ஈடுசெய்தல் கணக்கு மாலே கிளை</u><br>மாலே அரசாங்கத்தால் BOC மாலே கிளையில் 2011.01.20 இல் பேணப்பட்ட தேசிய மாணவர் கடன் திட்ட (NSLS) நிதியக் கணக்கில் (கணக்கு இல. 6320128697) MVR 10.0 மில்லியன் தொகையான வைப்பு உரிய மாணவர்களிற்கு குறித்த திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களிற்கான பிணையாக வைக்கப்பட்டுள்ளது.<br><br>"பங்குபற்றல் ஈடுசெய்தல் கணக்கு" ஆகவுள்ள குறித்த நிதிகளை வழங்குவதற்கு தனியான பொ.பே கணக்கு உருவாக்கப்பட்டிருந்தது. இக் கணக்கு அதே போல காலக் கடனாக MVR/ USD (பொது பேரேட்டு கணக்கு) செயற்படுகிறது.<br><br>2020.12.31 இல் உள்ளவாறான பங்குபற்றல் ஈடுசெய்தல் கணக்கின் (10875091) MVR 4,649,500.02 தொகையான மீதி 2020.12.31 இல் உள்ளவாறான மாணவர் கடன்களின் மொத்த நிலுவை மீதி - செலுத்த வேண்டிய |
| பங்குபற்றல் ஈடுசெய்தல் | 632 (மாலே கிளை) | 56,061,368 | இம் மீதியை சரிபார்ப்பதற்கு ஆவண சான்றுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | |

மாலே மாணவர் கடன் (22310542) தொகையுடன் இணங்குகிறது.

(ii) ICBS மற்றும் பிரதான முறைமையின் இலத்திரனியல் கணக்கு மீதியை கணக்கிணக்கம் செய்யும் போது ரூபா 1,186,978,749 பெறுமதியான பொருத்தமற்ற கொடுக்கல் வாங்கல்கள் காணப்பட்டன. பொருந்தாத கொடுக்கல் வாங்கல்கள் எந்தவித தெளிவுபடுத்தலும் இல்லாமல் நீண்ட காலமாக வருகின்ற மீதிகளைக் கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **தொகை** |
|---|---|
| -------- | ---------- |
| | **(ரூபா)** |
| 2016 | 143,859,408 |
| 2017 | 20,647,869 |
| 2018 | 8,661,890 |
| 2019 | 7,021,874 |
| 2020 | 1,006,787,708 |
| **மொத்தம்** | **1,186,978,749** |

பின்வரும் காரணங்களினால் கணக்கில் மீதி காணப்பட்டது.

ஏனைய வங்கிகளால் நிதிகள் இதுவரை உரிமை கோரப்பட்டிருக்கவில்லை.

தொடர்புடைய தரப்பினரிடமிருந்து கடன் அறிவுறுத்தல்கள் பெறப்படும் வரை நிதிகள் சேமிக்கப்பட்டன.

2020 இல் வரவு e-com கொடுக்கல் வாங்கல் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், கொடுக்கல் வாங்கல் பெறுமதிகள் கணிசமாக அதிகரித்துள்ளன. இது பொருந்தாத கொடுக்கல் வாங்கலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

ஏனைய வங்கி அல்லது தொடர்புடைய தரப்பினரிடமிருந்து அறிவுறுத்தல்கள்/ உரிமைக் கோரல்கள் பெறப்படும் வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கடன் மற்றும் வரவு அட்டை கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான நீண்டகால நிலுவை மீதிகளை தீர்வு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

**1.6.2 முற்பணங்கள்**

---------------------

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 20 செயற்படாத வாடிக்கையாளர்களின் மொத்த நிலுவைத் தொகை ரூபா 24,828.35 மில்லியனாக இருந்ததுடன் இது அத் திகதியில் உள்ளவாறான வங்கியின் மொத்தச் செயற்படாத கடன்கள் மற்றும் முற்பணங்களில் 25 சதவீதத்தைக் குறிக்கிறது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. (அட்டவணை கீழே) | மதிப்பீட்டு செயன்முறையின் கீழ் உள்ள ஜெயவிக்ரம ரைஸ், கே டி ஈபேர்ட், ருஹுணு அபிவிருத்தி, ஆர் என் கென்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஆர்டிஎம்டி ரெக்ஸ்டைல் மற்றும் செனாரோ மோட்டார் கம்பனி மற்றும் இசுரு இன்ஜினியரிங் ஆகியவற்றிற்கான மறுமலர்ச்சி பொதியை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் அமுல்ப்படுத்தியுள்ளது.<br><br>ஆகையால், ஜெயவிக்ரம ரைஸ் மற்றும் ஆர் டி எம் டி ரெக்ஸ்டைல்ஸிற்கு வழங்கப்பட்ட வசதிகளில் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்திறன் பிரிவாக மீள வகைப்படுத்தப்படலாம் என வங்கி கருதுகிறது.<br><br>2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஏனைய கம்பனிகளை மீள வகைப்படுத்தவும் எதிர்பார்க்கிறது.<br><br><u>சின்ரெசி பிறைவேட் லிமிட்டட்</u><br>2021.12.31 இல் உள்ளவாறான O/S ரூபா 1,190.08 மில்லியனாகும்.<br>2021 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க CBSL | வாடிக்கையாளர்களிடமிருந்து மொத்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு வங்கியால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| இல. | வாடிக்கையாளரின் பெயர் | மொத்த நிலுவை தொகை (ரூபா. மில்லியன்) |
|---|---|---|
| 1 | ஜெயவிக்ரம ரைஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 2,903.99 |
| 2 | கே டி ஈபேர்ட் & சன்ஸ் ஹோல்டிங்ஸ் பிறைவேட் லிமிட்டட் | 2,697.93 |
| 3 | சின்ரெசி பிறைவேட் லிமிட்டட் | 2,001.26 |
| 4 | டபிள்யூ எம் மென்டிஸ் & கம்பனி லிமிட்டட் | 1,485.19 |
| 5 | ருஹுணு அபிவிருத்தி ஒப்பந்தக்காரர்கள் | 1,296.77 |
| 6 | என்பீ பூட்ஸ் பிறைவேட் லிமிட்டட் | 1,253.47 |
| 7 | அனுடன் ஹோல்டிங் பிறைவேட் லிமிட்டட் | 1,248.27 |
| 8 | லிங்க் இன்ஜினியரிங் பிறைவேட் லிமிட்டட் | 1,223.11 |
| 9 | கடுவெல ஹோல்டிங்ஸ் | 1,105.90 |
| 10 | ஆர் என் கென்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1,041.59 |
| 11 | ஆர் டி எம் டி ரெக்ஸ்டைல் (பிறைவேட்) லிமிட்டட் | 1,033.79 |
| 12 | தூர்ஸ் ரிட்ரீட் பிறைவேட் லிமிட்டட் | 961.96 |
| 13 | தொலியதூ இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட் | 932.041 |
| 14 | காஸ்டவே மல்டிவ்ஸ் பிறைவேட் லிமிட்டட் | 917.86 |
| 15 | நவலோகா ஸ்டீல் இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 890.73 |
| 16 | சீஎம்எல்-எம்ரீடி கென்ஸ்ட்ரக்ஷன் லிமிட்டட் | 864.48 |
| 17 | செனாரோ மோட்டார் கம்பனி | 803.54 |
| 18 | சன்பே ஜீன்ஸ் கோப்பரேசன் (பிறைவேட்) லிமிட்டட் | 760.22 |
| 19 | என் அன்ட் ஏ இன்ஜினியரிங் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 717.85 |
| 20 | இசுரு இன்ஜினியரிங் பிறைவேட் லிமிட்டட் | 688.4 |
| | **மொத்தம்** | **24,828.35** |

சுற்றறிக்கையின் பிரகாரம் சட்ட மற்றும் துணை நடவடிக்கைகள் 2022.03.31 வரை இடைநிறுத்தப்பட்டன.

டபிள்யூ எம் மென்டிஸ் & கம்பனி லிமிட்டட்

கலப்பு உரிமம் மற்றும் எதனோல் உற்பத்தி உரிமம் என்பன மதுவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருக்காததன் காரணமாக முன்மொழியப்பட்ட காசுப்பாய்ச்சல் வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. உரிய உரிமத்தை வழங்கும் வரை எந்த எந்தக் கொடுப்பனவையும் அறவிட வேண்டாம் என்று கம்பனி நீதிமன்றத்தில் கோரியுள்ளது.

என்பீ பூட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்

2021.12.31 இல் உள்ளவாறான O/S ரூபா 1,253.47 மில்லியன் ஆகும். சட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அனுடன் ஹோல்டிங் பிறைவேட் லிமிட்டட்

2021.12.31 இல் உள்ளவாறான O/S ரூபா 1,223.54 மில்லியன் ஆகும். ஆரம்ப அறவீட்டு நடவடிக்கைகள் (Parate execution) இடைநிறுத்தப்பட்டன. மீள்பட்டியலிடலுக்கான

பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்ற அதே நேரம் ரூபா 3.2 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன் தொழிற்படு மூலதன வசதிகள் ‘‘சௌபாக்யா கொவிட் 19’’ வசதியின் கீழ் வழங்கப்பட்டுள்ளது. தொழிற்படு மூலதன வசதிகள் அதற்கேற்ப திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

<u>லிங்க் இன்ஜினியரிங் பிறைவேட் லிமிட்டட்</u>
2021.12.31 இல் உள்ளவாறான O/S ரூபா 1,171.70 மில்லியன் ஆகும். ஏற்கனவே உள்ள NPA portfolio இற்குக் கோரப்பட்ட திருப்பிச் செலுத்தும் திட்டம் இன்னும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

எனினும், ADB நிதியளிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு வங்கி நிதியளிக்கிறது, அதன் பிரகாரம் அவர்கள் குறித்த செயற்திட்டத்தின் இலாபத்தில் ரூபா 32 மில்லியனை வைப்புச் செய்வதற்கு இணங்கியிருந்தனர்.

<u>கடுவெல ஹோல்டிங்ஸ்</u> வசதிகளுக்கான (அடகு/ நடுத்தர குறுங் கால கடன்/ எல்சி உண்டியல்கள்/ மேலதிகப்பற்று) வழக்குகள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு

தீர்ப்புக்கள் பெறப்பட உள்ளன.

<u>தூர்ஸ் ரிட்ரீட் (பிறைவேட்) லிமிட்டட்</u> சிவில் நீதிமன்றம் 21.02.01 இல் 4003/Cv-C/2019 ஆம் இலக்க அமுல்ப்படுத்தல் வழக்கின் கீழ் குறிப்பிடப்பட்ட இரண்டு வசதிகளுக்கு அடகு வைக்கப்பட்டுள்ள அவனி நேச்சர் பரடைஸ் றிசோர்ட்டின் குத்தகை உரிமையை விற்பனை செய்து 6 மாதங்களுக்குள் நீதிமன்றத்திற்கு அறிவிக்குமாறு விற்பனை செய்யும் உரிமையை வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் நாங்கள் அதிக விலையிலான கேள்வியை பிரசுரித்து இறுதி செய்து 2021.03.07 இல் ஐ.அ.டொலர் 8.5 மில்லியன் பெறுமதிக்கு கேள்வியை வழங்கினோம். அவர்கள் உரிய காலத்தினுள் பணம் செலுத்தத் தவறியதால், 2021.04.07 இல் ஹரி & கோ இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு ஐ.அ.டொலர் 7.176 மில்லியன் பெறுமதிக்கு இரண்டாவது தரப்பினரிற்கு வழங்கினோம். பணம் செலுத்துவதற்கான கடைசி திகதி

2021.05.09 ஆக இருந்ததுடன் இரண்டாவது தரப்பினரும் உரிய காலத்தினுள் பணம் செலுத்தத் தவறியிருந்தனர். இரண்டாவது கேள்விதாரரான ஹரி & கோ. Int. (பிறைவேட்) லிமிட்டட் மேலதிக காலப்பகுதியை கோரியும் விற்பனை செயன்முறையை நிறுத்தக் கோரியும் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளது. 2021.10.25 இல் பெறப்பட்ட தீர்ப்பில் மேலதிக காலப்பகுதியை வழங்குவதற்கு சட்டப்பூர்வ நியாயப்படுத்தல் எதுவும் காணப்படவில்லை. அதேநேரம், விற்பனை உரிமைகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அமல்ப்படுத்தல் வழக்கை நடாத்துமாறு வங்கி நீதிமன்றத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளது. அடுத்த விசாரணை திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. நீதிமன்றத்திடமிருந்து மீண்டும் விற்பனை உரிமையை எதிர்பார்க்கிறோம்.

<u>தொலியதூ இன்வெஸ்ட்மெண்ட் (பிறைவேட்) லிமிட்டட்</u>

இந்திய அரச வங்கி (SBI) ஆதனத்தை விற்பனை செய்வதற்கு பிரசுரித்திருந்ததுடன்

அவர்கள் முதலீட்டாளருடன் பேச்சுவார்த்தை நடாத்தி வருகின்றனர். SBI அலுவலகத்தில் 2020.09.01 இல் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட அவர்களின் எதிர்பார்ப்பின் பிரகாரம் செயன்முறை ஆறு மாதங்களுக்குள் இறுதி செய்யப்படும். 2020.11.02 இல் இந்திய அரச வங்கி, மாலைதீவு வங்கியின் பிரதிநிதிகள், கேபிஎம்ஜியின் மதிப்பீட்டு உத்தியோகத்தர் மற்றும் தரகு கம்பனியைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகளுடன் இணைந்து சிரேஷ்ட கடன் முகாமையாளர் உள்ளடங்கிய குழு ஆதனத்தை பார்வையிட்டிருந்தது. மாலைதீவு வங்கியில் (BML) மதிப்பீட்டை இறுதி செயவதற்கு மலே BOC 2021 சனவரியில் கூட்டமொன்றை நடாத்தியிருந்தது. ஏனைய இரண்டு வங்கிகளின் கருத்துக்காக காத்திருக்கிறோம். மேலும், 2021 யூலை 15 இல் SBI இன் கடன் முகாமையாளருடன் நடைபெற்ற சமீபத்திய உரையாடலின் போது கம்பனி அதனை 2012 முதல் செலுத்தியிருக்காததால் , நியதிச்சட்ட

நிலுவைகளை விட்டுவிடுவதற்கு அரசாங்கத்திடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என அவர் தெரிவித்திருந்தார்.

<u>காஸ்டவே மல்டிவ்ஸ் பிறைவேட் லிமிட்டட்</u>

2020 ஆகஸ்ட் 30 ஆம் திகதிய சலுகைக் கடிதத்தில் இணங்கப்பட்ட நிபந்தனைகளுடன் இணங்கி ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் மீள்பட்டியலிடப்பட்ட வசதிகள் வழங்கப்படும். சலுகை கடிதத்தின் பிரகாரம் கம்பனி 60 நாட்களுக்குள் ஐ.அ.டொலர் 250,000/- தொகையையும் சலுகை கடிதத்தின் திகதியிலிருந்து 150 நாட்களினுள் அடுத்த ஐ.அ.டொலர் 250,000 தொகையையும் சலுகை கடிதத் திகதியிலிருந்து 300 நாட்களினுள் இன்னொரு ஐ.அ.டொலர் 100,000/- தொகையையும் வைப்பு செய்ய வேண்டும். குறிப்பிட்ட நிபந்தனையின பிரகாரம் 1வது ஐ.அ.டொலர் 250,000/- மற்றும் 2வது ஐ.அ.டொலர் 250,000/- இணங்கப்பட்ட உரிய திகதிக்கு முன்னர் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. சலுகை கடிதத்தின் பிரகாரம் 2021.06.24

இல் கடைசி கொடுப்பனவான ஐ.அ.டொலர் 100,000/- செலுத்தப்பட்டது. இது மீள்பட்டியலிடலை வழங்குவதற்கான செயன்முறையின் கீழ் உள்ளது. இணங்கப்பட்டவாறு கம்பனி நிதிகளை வைப்புச் செய்திருக்கவில்லை, எனவே, அறவீட்டு திகதியை உறுதிப்படுத்தும் நிலையில் இல்லை.

<u>நவலோகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட்</u>
மொத்த NPA தொகுப்பு 2021.07.26 இல் மீளப்பட்டியலிடப்பட்டது. மீள்பட்டியலின் ஒரு பகுதி ஆதனத்திற்கு எதிராகவும், மிகுதியாகவுள்ள பகுதி பணிப்பாளர் உத்தரவாதத்திற்கு எதிராகவும் பிணை வைக்கப்பட்டுள்ளது. 2022 ஆகஸ்ட்டில் உள்ள 13 தொடர்ச்சியான மாதங்களிற்கு தொடர்ந்து திருப்பிச் செலுத்துவதை பின்பற்றி கடன்களை செயலாற்றல் பிரிவிற்கு மாற்ற முடியும், வணிக மறுமலர்ச்சி நோக்கத்திற்காக கம்பனிக்கு ரூபா 500.0 மில்லியன் புதிய இறக்குமதி வரிசை வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

<u>ஷான்பே ஜீன்ஸ்</u>

கோப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டட்
2020.12.31 இல் உள்ளவாறான O/S ரூபா 756.11 மில்லியன் ஆகும்.
அடகு வைக்கப்பட்ட இரண்டு ஆதனங்களும் ஏலம் விடப்பட்டு 2018.12.08 இல் வங்கிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. கலைத்தல் செயற்பாடு நடைபெற்று வருகிறது.

என் அன்ட ஏ இன்ஜினியரிங் சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டட்
கம்பனியின் காசுப்பாய்ச்சலை கருத்தில் கொண்டு OIC 340/2020 இன் பிரகாரம் ரூபா 632.0 மில்லியன் மீளப்பட்டியலிடப்பட்ட மூன்று காலக் கடன்களின் நிலுவை மீதிகள் மீளப்பட்டியலிடப்பட்டன. ரூபா 1,077.19 மில்லியன் கூட்டுமொத்தமான ஏற்கனவேயுள்ள மீளப்பட்டியலிடப்பட்ட காலக் கடன்கள் ஒழுங்கற்ற முறையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் கம்பனி கடந்த 06 மாதங்களாக அதை அறவீடு செய்வதற்காக ரூபா 35.8 மில்லியன் தொகையை ஒதுக்கியிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2020 ஆம் ஆண்டின் போது கடன்கள் வழங்கப்பட்ட வாடிக்கையாளர்களின் பட்டியல் உள்ளதுடன் அக் கடன்கள் அதே ஆண்டில் NPL வகைக்கு மாற்றப்பட்டுள்ளன (மீள்பட்டியலிடப்பட்ட வசதிகள் விலக்கப்பட்டுள்ளது). பின்வரும் வாடிக்கையாளர்கள் | கே டி ஈபேர்ட் மற்றும் ருஹுணு டெவெலப்மென்ட் இவை நிர்மாண | குறிப்பிட்ட வாடிக்கையாளர் ஒருவரிற்கு |

மேற்படி பட்டியலில் முதல் 20 வாடிக்கையாளர்களைக் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

| இல. | வாடிக்கையாளரின் பெயர் | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்த தொகை | 2020.12.31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள மொத்த தொகை |
|---|---|---|---|---|
| | | ------ | ------ (ரூபா. மில்லியன்) | ------ (ரூபா. மில்லியன்) |
| 1 | கே டி ஈபேர்ட் & சன்ஸ் ஹோல் பிறைவேட் லிமிட்டட் | 12 | 241.45 | 185.27 |
| 2 | செனாரோ மோட்டார் கம்பெனி (பிறைவேட்) லிமிட்டட் | 11 | 64.58 | 64.58 |
| 3 | ருஹுணு டெவெ. கென்ரக்ரேர்ஸ் & இன்ஜி. பிறைவேட் லிமிட்டட் | 8 | 95.00 | 32.50 |
| 4 | நவலோகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 3 | 30.00 | 30.00 |
| 5 | ரென்ட செற்றோ்ஸ் பிறைவேட் லிமிட்டட் | 1 | 25.00 | 25.00 |
| 6 | பேலா இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | 1 | 18.52 | 18.52 |
| 7 | திரு டி எம் பி சூலரத்ன | 3 | 15.40 | 15.40 |
| 8 | திரு டபிள்யூ எம் ஏ அபேரத்ன | 1 | 15.00 | 14.97 |
| 9 | எஸ் வி கே இம்போர்ட்ஸ் | 2 | 13.85 | 12.19 |
| 10 | சிரிமதுர ஹோட்டல்ஸ் லிமிட்டட் | 1 | 12.00 | 12.00 |
| 11 | மோக்ஷா லிமிட்டட் | 1 | 11.96 | 11.96 |
| 12 | கிட்டீஸ் அன்ட் டொய்ஸ் இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | 2 | 10.50 | 10.50 |
| 13 | திரு எஸ் எஸ் ஜே பி பெர்னாண்டோ | 4 | 9.10 | 8.87 |
| 14 | திரு கே.யு. சுமணசேன | 2 | 8.68 | 8.68 |
| 15 | ஹெரதொன் ஹொஸ்பிட்டலிட்டி (பிறைவேட்) லிமிட்டட் | 2 | 6.64 | 6.64 |
| 16 | கலாபுவ நேச்சர் ரிசோர்ட் | 5 | 6.23 | 6.23 |
| 17 | திரு கே ஏ எஸ் சோமபாலா | 1 | 5.90 | 5.90 |

கம்பனிகளாக உள்ளதுடன் கைத்தொழில் துறையின் கீழ்நோக்கிய போக்கு பெறப்பட்ட வசதிகளை திருப்பிச் செலுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக RDA மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்தான கொடுப்பனவுகளில் தாமதம்.

செனாரோ மோட்டார் கம்பனி நாட்டின் வாகனங்களின் விலை அதிகரிப்பு காரணமாக வாகன வர்த்தகம் வீழ்ச்சியடையும் போக்கை கம்பனி எதிர்கொண்டுள்ளது.

நவலோகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டட் CBSL வழிகாட்டல்களின் 70.30 விதியின் பிரகாரம் ரூபா 30.0 மில்லியன் பணச் சந்தைக் கடன்கள் NPA ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் இக் கடன் 2021.07.26 இல் மீளப்பட்டியலிடப்பட்டுள்ளது.

ரென்ட செற்றோ்ஸ் பிறைவேட் லிமிட்டட் 2021.03.04 இல் NPA இலிருந்து இந்த வசதி எடுக்கப்பட்டதுடன் அது இப்போது வழக்கமான பிரிவில் உள்ளது.

கடன்களை வழங்குவதற்கு முன்னர் திருப்திகரமான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் வங்கியால் செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | திரு டபிள்யூ ஜி பி என் எல் வீரசூரிய | 1 | 5.55 | 5.55 | பேலா இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனி |
| 19 | பிறீடென்ற் உலு கம்ஹாலா | 4 | 5.29 | 5.26 | எதிர்பார்த்தவாறு செயற்திட்டங்களிலிருந்து நிலுவைத் தொகையைப் பெற்றிருக்கவில்லை. சட்ட நடவடிக்கை தொடங்கப்பட உள்ளது.<br><br>திரு. டி எம் பி சூலரத்ன கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வணிகம் கைவிடப்பட்டது. எனினும் 2021 ஏப்ரலில் இந்த வசதி முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டது.<br><br>திரு டபிள்யூ எம் ஏ அபேரத்ன அரிசி ஆலை ஒன்றுக்காக வழங்கப்பட்டது. அரிசி ஆலை சரியாக செயற்படாததால் கடன் தவணைப் பணங்களை மீளசெலுத்தும் நிலையில் வாடிக்கையாளர் காணப்படவில்லை. சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.<br><br>எஸ் வி கே இம்போர்ட்ஸ் எஸ் வி கே இம்போர்ட்ஸ் உரிமையாளர், கடன் பெற்றவர் அவரது வியாபாரத்தில் சில நட்டங்களை எதிர்கொண்டதால், நம்பிக்கைப் பொறுப்பு பெறுவனவு (TR) |

வசதிகளை தனியான கொடுப்பனவொன்றில் தீர்ப்பனவு செய்யும் நிலையில் இல்லை. ஆகையால் கடன்பெற்றவரிற்கு அவரது வணிகத்தை மீட்டெடுப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு (2022 செப்தெம்பர் வரை) ரூபா 15.0 மில்லியன் தொழிற்படு மூலதனக் கடன் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர் குறித்த கடனைச் செலுத்துவதற்காக மாதாந்தம் ஏறத்தாழ ரூபா 650,000.00 தொகையை செலுத்துகிறார். மேலும் கடன் பெற்றவர் NPA TR வசதிகளை அறவீடு செய்வதற்காக மேலும் ரூபா 50,000.00 ஐ மாதாந்த கொடுப்பனவாக வைப்பு செய்வதற்கு இணங்கியிருந்தார், மேலும் 2021 ஒக்தோபர் வரை நாங்கள் ரூபா 150,000.00 (ரூபா 50,000 * 3) தொகையை அறவீடு செய்துள்ளோம். அத் தொழிற்படு மூலதனக் கடனைத் தீர்ப்பனவு செய்த பின்னர் கடன் பெற்றவர் NPA TR வசதிகளை முழுமையாகத் தீர்ப்பனவு செய்யும் வரை மாதாந்தக் கட்டணமான ரூபா 650,000.00 ஐ தொடர்வதற்கு இணங்கியிருந்தார்.

சிறிமதுர ஹோட்டல் லிமிட்டட்

ஹோட்டல் துறையின் கீழ் கம்பனியின் தொழிற்படு மூலதனத் தேவைப்பாட்டை முகாமை செய்வதற்கு சௌபாக்யா கடன் திட்டத்தின் கீழ் உரிய கடன் வழங்கப்பட்டது. அடுத்த நாள் அதே கடன் முறைமைப்படுத்தப்பட்டது.

மோக்ஷா லிமிட்டட்

இரண்டு மாத காலப்பகுதியினுள் செலுத்தாத தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனி இணங்கியிருந்தது.

கிட்டீஸ் அன்ட் ரொய்ஸ் இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட்

கருத்துரை வழங்கப்படவில்லை.

திரு எஸ் எஸ் ஜே பி பெர்னாண்டோ

கொவிட் -19 தொற்றுநோயால் மீன்பிடிக் கைத்தொழில் மோசமாகப் பாதிக்கப்பட்டதுடன் வாடிக்கையாளர் இரண்டு பல நாள் படகுகளை பழுதுபார்ப்பதற்கு வருமானத்தை செலவிட்டுள்ளார். 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிலுவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு வாடிக்கையாளர் இணங்கியிருந்தார்.

திரு கே யூ

சுமணசேன பிணையாக வைத்திருக்கும் FD ஐ இரத்து செய்வதன் மூலம் வசதி தீரப்பனவு செய்யப்படும்.

ஹெரதொன் ஹொஸ்பிட்டாலிட்டி (பிறைவேட்) லிமிட்டட் ஹோட்டல் ஒன்றை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், நிர்மாணங்கள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால் வாடிக்கையாளர் கடன்களை திருப்பி செலுத்துவதற்காக வருமானத்தை பெற்றிருக்கவில்லை.

கலாபுவா நேச்சர் ரிசோர்ட் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட்-19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள வரவேற்பு மண்டபத்தின் வணிகத்தில் வாடிக்கையாளர் ஈடுபட்டுள்ளார். அதனால் வருமானம் குறைவடைந்துள்ளது. வசதிகளை மீளப்பட்டியலிடுவதற்கு வாடிக்கையாளருடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்ட போதிலும் நாட்டில் நிலவும் தொற்றுநோய் நிலைமையுடன் வருமானத்தை எதிர்வுகூற இயலாததன் காரணமாக வசதிகள்

மீளப் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

திரு கே ஏ எஸ் சோமபால
நெல் அரைக்கும் ஆலை நோக்கத்திற்காக வசதி வழங்கப்பட்டுள்ளது. விலை தளம்பல் மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக விளைச்சல் குறைவடைந்துள்ளது. இதனால் ஆலை சரியாக செயற்படவில்லை.

திரு டபிள்யூ ஜி பி என் எல் வீரசூரிய
நெல் அரைக்கும் ஆலை நோக்கத்திற்காக வசதி வழங்கப்பட்டுள்ளது. விலை தளம்பல் மற்றும் பருவநிலை மாற்றம் காரணமாக விளைச்சல் குறைவடைந்துள்ளது. இதனால் ஆலை சரியாக செயற்படவில்லை.

பிறீடென்ற் யூஜயூ கம்ஹாலா
இந்த நான்கு கடன்களும் OIC 328/2019 நிவாரணப் பொதியின் கீழ் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறையை வலுப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட 2வது கடன்களாகும். சுற்றுலா ஹோட்டல்களுக்கு

| | | | |
|---|---|---|---|
| | | மாபிள்களை வழங்கும் சுற்றுலா சபை பதிவுசெய்த கம்பனியாக வாடிக்கையாளர் உள்ளார். கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக வாடிக்கையாளரால் இக் கடன்களை எதிர்பார்த்தவாறு செலுத்த முடியாதிருந்தது. | |
| (iii) | மூலதனம் மற்றும் வட்டி மீள்கொடுப்பனவு செய்யப்படாத போதிலும் நட்டத்தில் உள்ள அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் NPL ஆக வகைப்படுத்தப்படுவதை வங்கி தடுக்கிறது. எனவே நிலை 3 இன் கீழ் வெளிப்படுத்தப்பட்ட கடன்கள் குறைத்துக் காட்டப்படலாம். | ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் (SLAL) SLAL நட்டக்கழிவு ஏற்பாட்டு நோக்கத்திற்காக நிலை 2 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2021.09.30 இல் ரூபா 672.9 மில்லியனை வழங்கியுள்ளது (எல்கேஆர் வெளிப்படுத்துகைக்கான: ரூபா 213.5 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் வெளிப்படுத்துகைக்கான ரூபா 459.4 மில்லியன்)<br><br>SLAL இற்கு வழங்கப்படும் வசதிகள் அரசாங்க திறைசேரியால் (GT) வழங்கப்பட்ட செல்லுபடியாகும் உதவி கடிதத்தின் மூலம் மேவுகை செய்யப்படுகிறது. GT நிலைமையை கண்காணித்து வருகிறதுடன் ஐந்தொகை மேம்படுத்தப்பட்டு மறுசீரமைப்பு பூர்த்தி | எஸ்எல்எவ்ஆர்எஸ் 09 இன் பிரகாரம் உரிய நிலைகளிற்கு வகைப்படுத்தும் போது வாடிக்கையாளர்களின் குறிப்பிடத்தக்க கடன் அபாயத்தைக் கருத்தில் கொள்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| ளூழுநு இன் பெயர் | கடன் இல. | மறுசீரமைக்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை | பாதுகாப்பு | குறிப்புக்கள் |
|---|---|---|---|---|
| ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் | 76913761 | 10 தடவைகள் | உதவி கடிதம் | இலங்கை கணக்கீட்டு நியமம் - எஸ்எல்ஏஎவ்ஆர்எஸ் 9 ஐ பின்பற்றுவது தொடர்பான CBSL வழிகாட்டலின் பிரகாரம் இக் கடன் வசதிகள் 3 ஆம் கட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டும், ஏனெனில் கிட்டத்தட்ட அனைத்து வசதிகளும் இரண்டு முறைக்கு மேல் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. |
| | 78038701 | 8 தடவைகள் | உதவி கடிதம் | |
| | 78038873 | 8 தடவைகள் | உதவி கடிதம் | |
| | 85759786 | 1 தடவை | திறைசேரி உத்தரவாதம் | |
| | 79233764 | 8 தடவைகள் | உதவி கடிதம் | |
| | 79930506 | 10 தடவைகள் | உதவி கடிதம் | |
| | 80825777 | 7 தடவைகள் | உதவி கடிதம் | |
| வீதி அபிவிருத்தி அதிகார | 73039168 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | இலங்கை கணக்கீட்டு நியமம் - எஸ்எல்எவ்ஆர்எ |
| | 73044929 | 2 | திறைசேரி | எஸ்எல்எவ்ஆர்எ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சபை | | தடவைகள் | உத்தரவாதம் | ஸ் 9 ஐ பின்பற்றுவது தொடர்பான CBSL வழிகாட்டலின் பிரகாரம் இக் கடன் வசதிகள் 2 ஆம் கட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் கிட்டத்தட்ட அனைத்து வசதிகளும் இரண்டு முறைக்கு மேல் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. | செய்யப்படும் வரை உதவி கடிதம் புதுப்பிக்கப்படுகிறது. SLAL இற்கு ஐ.அ.டொலர் 500 மில்லியனை அரசாங்கம் அங்கீகரித்ததுள்ளது. இதில் CPC இற்கு ஐ.அ.டொலர் 25.0 மில்லியன் தொகையை செலுத்துவதற்கும் செயற்பாட்டுச் செலவினங்களைச் எதிர்கொள்வதற்கும் 2020 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 150.0 மில்லியன் விடுவிக்கப்பட்டது.<br><br>கொவிட் 19 காரணமாக விமான நிலையம் மூடப்பட்டமை அதன் காசுப்பாய்ச்சலை கடுமையாக பாதித்துள்ளது. விமான நிலையம் திறக்கப்பட்ட போதிலும் பயணிகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளனர்.<br><br>இந்த வசதிகள் தொடர்பான வட்டிக் கூறு 2021 மே வரை சரியான நேரத்தில் வழங்கப்பட்டுள்ளது. 2021 இன் 5 ஆம் இலக்க CBSL சுற்றறிக்கையின் பிரகாரம் SLAL அதன் ஐ.அ.டொலர் மற்றும் எல்கேஆர் காலக் கடன்கள் மற்றும் மேலதிகப்பற்று வசதிகளுக்கான வட்டியை காலம் தாழ்த்தி செலுத்துவதற்கான |
| | 73378065 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 73936442 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 74018817 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 74086164 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 74129360 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 75098630 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 75119195 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 75801082 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 76079442 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 76215038 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 76663267 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 76874198 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 83009099 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 84157620 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 82975661 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 75494462 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 83584764 | 2 | திறைசேரி | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தடவைகள் | உத்தரவாதம் | | உரிமையை ஏற்கனவே கோரியுள்ளது. அதன் பிரகாரம் 2021 ஆகஸ்ட் 30 வரை வட்டியை காலம்தாழ்த்தி செலுத்தும் உரிமை வழங்கப்பட்டது. வட்டி திருத்தம் 2021 செப்டம்பர் 1 முதல் தொடங்கப்பட்டு எந்தவித நிலுவைகளும் இல்லாமல் செலுத்தப்பட்டது. |
| | 85138455 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 85918910 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| | 85991542 | 2 தடவைகள் | திறைசேரி உத்தரவாதம் | | |
| லங்கா சதொச லிமிட்டட் | TF-L488961 | 1 தடவை | பொறுப்பேற்றல் கடிதம் | ரூபா 8,626,982,993.38 மற்றும் ரூபா 1,612,745,537 ஆகிய இரண்டு காலக் கடன்கள் 2019.12.31 வரையான மூலதனம் மற்றும் திரண்ட வட்டியை அறவீடு செய்வதற்கும் மேலும் இரண்டு காலக் கடன்களை வழங்குதல் பூர்த்தியடையும் வரை திரண்ட வட்டியை விட்டுவிடுவதற்கும் வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் லங்கா சதொச லிமிட்டட்டை NPL ஆக வகைப்படுத்துவதை வங்கி தடுத்துள்ளமை தெரிகிறது. | மேலும், அரசாங்கத்தின் உத்தரவாதக் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாத மற்றும் பதிவழிக்கப்பட்ட அனுபவமும் எங்களுக்கு இல்லை. அதனடிப்படையில், இந்த வசதிகள் நிலை 2 இன் கீழ் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தன.<br><br>வீதி அபிவிருத்தி அதிகாரசபை மீள்கொடுப்பனவு காலப்பகுதியை 15 ஆண்டுகள் வரை நீடித்து, திருப்பிச் செலுத்தும் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் மூலதன மீள்கொடுப்பனவுகளை bullet கொடுப்பனவாக பிற்போடுவதன் மூலம் RDA இன் கோரிக்கையின் அடிப்படையில் RDA கடன்கள் மறுசீரமைக்கப்படுகின்றன. |
| இலங்கை அரசாங்கம் | | 4 தடவைகள் | கடன் உடன்படிக்கை | இலங்கை கணக்கீட்டு நியமம் - எஸ்எல்எவ்ஆர்எஸ் 9 ஐ பின்பற்றுவது தொடர்பான CBSL வழிகாட்டலின் | வசதி வாரியான |

பிரகாரம் இந்த கடன் வசதிகள் 3 ஆம் கட்டத்தின் கீழ் வகைப்படுத்தப்பட வேண்டும், ஏனெனில் கிட்டத்தட்ட அனைத்து வசதிகளும் இரண்டு முறைக்கு மேல் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. ஆனால் அனைத்து வசதிகளும் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டதிலிருந்து நிலை 1 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கடன்கள் ஒரு முறை மட்டுமே மறுசீரமைக்கப்பட்டுள்ளன. எனினும் நிறுவன வாரியான RDA கடன்கள் இரண்டு முறைகள் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

லங்கா சதொச லிமிட்டட் 2021.01.25 இல் பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்ட பொறுப்பேற்றல் கடிதத்திற்கு எதிராக குறிப்பிடப்பட்ட இறக்குமதிக் கடன்களின் கீழ் மொத்தப் பொறுப்புக்கு இடமளிப்பதற்கு ரூபா 8,626,982,993.38 மற்றும் ரூபா 1,612,745,537.00 ஆகிய இரண்டு காலக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு கடன்களின் கீழும் 2021 செப்தெம்பர் 30 வரையான ரூபா 3,829,027,254.20 கூட்டுமொத்தமான கடன் தவணைகளை வங்கி அறவீடு செய்திருந்தது..

இலங்கை அரசாங்கம் GOSL இற்கு வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 497,000/-, ஐ.அ.டொலர் 14.0 மில்லியன், ஐ.அ.டொலர் 25.0 மில்லியன், ஐ.அ.டொலர் 28.0 மில்லியன் மற்றும்

| | | | |
|---|---|---|---|
| | | ஐ.அ.டொலர் 17.251 மில்லியன் வசதிகள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன.<br><br>ஐ.அ.டொலர் 100.0 மில்லியன் வசதி ஐ.அ.டொலர் 75.0 மில்லியனாகக் குறைக்கப்பட்டு, அறவிடப்பட்டுள்ளது. 2020.12.30 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 570.0 மில்லியன் நிலுவையாகவுள்ள மொத்த வசதி 2021.11.12 அளவில் ஐ.அ.டொலர் 563.38 மில்லியன் வரை குறைவடைந்துள்ளது. GOSL வெளிநாட்டு நாணயக் கடன் வெளிப்படுத்துகைக்கு எதிரான மொத்த நட்டக்கழிவு பின்வருமாறுள்ளது.<br><br>ரூபா 3,606.5 மில்லியன் (2021.09.30 இல் நாட்டின் விலைவிகித மதிப்பீட்டைக் குறைப்பதற்கு முன்னர்).<br>ரூபா 4,080.0 மில்லியன் (2021.09.30 இல் நாட்டின் விலைவிகித மதிப்பீட்டைக் குறைத்த பின்னர்). | |
| (iv) | அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட சில வசதிகள் சார்பாக பொது திறைசேரியால் வங்கிக்கு வழங்கப்பட்ட திறைசேரி நட்டஈடுகள்/ திறைசேரி உத்தரவாதங்கள்/ உதவி கடிதங்களை நீடிப்பதில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. | மிஹின் லங்கா லிமிட்டட் காலாவதி திகதிகளுக்கு முன்னர் திறைசேரி உத்தரவாதங்கள் மீதான | அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட சில வசதிகள் |

| SOE இன் பெயர் | பிணை வகை (திறைசேரி உத்தரவாதங்கள்/ நட்டஈடுகள்/ உதவி கடிதம்) | குறிப்பு இல. | வசதி தொகை | பிணை காலாவதி திகதி | பிணை புதுப்பித்தல் திகதி | வரை செல்லுபடியாகும் |
|---|---|---|---|---|---|---|
| மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | உதவிக் கடிதம் | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ/495/2 | ரூபா 1,650 மில்லியன் | 2019.03.31 | 2020.06.18 | 2020.12.31 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /460/7 | ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் | 2018.12.31 | 2020.06.18 | 2020.12.31 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /482/5 | ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் | 2018.12.31 | 2020.06.22 | 2020.12.31 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /495/4 | ரூபா 1,650 மில்லியன் | 2020.12.31 | 2021.05.02 | 2021.12.31 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /460/13 | ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் | 2020.12.31 | 2021.05.02 | 2021.12.31 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /460/10 | ஐ.அ.டொலர் 2.5 மில்லியன் | 2020.12.31 | 2021.05.02 | 2021.12.31 |
| ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் | உதவிக் கடிதம் | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /494/6 | ரூபா 5.0 பில்லியன்<br>ரூபா 4.0 பில்லியன்<br>ரூபா 3.9 பில்லியன் | 2020.06.30 | 2020.07.07 | 2021.06.30 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /499/5 | ஐ.அ.டொலர் 25.0 மில்லியன் | 2019.02.21 | 2020.05.18 | 2021.02.21 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /499/3 | ஐ.அ.டொலர் 25.0 மில்லியன் | 2019.02.21 | 2019.03.29 | 2020.02.21 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /460/17 | ஐ.அ.டொலர் 32.5 மில்லியன் | 2020.12.31 | 2021.02.18 | 2021.12.31 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /400/11 | ஐ.அ.டொலர் 32.5 மில்லியன் | 2019.12.31 | 2020.02.28 | 2020.12.31 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /460/9 | ஐ.அ.டொலர் 32.5 மில்லியன் | 2018.12.31 | 2019.04.04 | 2019.12.31 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /482/7 | ஐ.அ.டொலர் 42.5 மில்லியன் | 2019.10.07 | 2019.10.07 | 2020.10.07 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /482/10 | ஐ.அ.டொலர் 42.5 மில்லியன் | 2020.10.07 | 2020.11.19 | 2021.10.07 |
| | | ரீஓ/ஆர்ஈவீ/எல்சீ /482/5 | ஐ.அ.டொலர் 42.5 மில்லியன் | 2018.10.07 | 2018.10.26 | 2019.10.07 |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | திறைசேரி நட்டஈடு | ரீஓ/ஆர்ஈவீ/ரீஜீ /361/3 | ஐ.அ.டொலர் 200 மில்லியன் | 2019.07.30 | 2020.05.19 | 2020.07.30 |
| இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் | திறைசேரி உத்தரவாதம் | ரீஓ/ஆர்ஈவீ/ரீஜீ /536/2 | ரூபா 100 மில்லியன் | 2020.10.09 | 2020.10.23 | 2021.01.08 |

கோரிக்கைகளை வங்கி பதிவு செய்துள்ளது. பின்னர் 2021.12.31 வரையான மேலதிக காலப்பகுதிக்கு அல்லது கலைப்பு இறுதிப்படுத்தப்படும் வரை எது முந்தையதோ அதுவரை நீடிப்பு பெறப்பட்டது. அதற்கிணங்க கடன் மீள்கொடுப்பனவு காலப்பகுதி நீடிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் தற்போதுள்ள வசதிகள் உதவிக் கடிதம்/ திறைசேரி உத்தரவாதங்களுக்கு எதிராக பாதுகாக்கப்பட்டு செல்லுபடியாகும் காலப்பகுதியை மேவுகை செய்கிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வங்கியால் விடுக்கப்பட்ட பல கோரிக்கைகளின் பிரகாரம் பொதுமுயற்சிகள் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் 2019.12.31 ஆம் திகதிய அவரது கடிதத்தின் மூலம் திறைசேரி செயலாளரால் அறிவுறுத்தப்பட்டவாறு 2019.07.31 முதல் அமுலுக்கு வரும் வகையில் BOC இற்கு வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 200.0

சார்பாக பொது திறைசேரியால் திறைசேரி நட்டஈடுகள்/ திறைசேரி உத்தரவாதங்கள்/ உதவி கடிதம் ஆகியவற்றின் காலப்பகுதிகளை நீடிக்கும் போது தேவையற்ற தாமதங்களைத் தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| | | மில்லியன் வரையான திறைசேரி நட்டஈட்டு பெறுமதியை மீட்டெடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.<br><br>அதன் பிரகாரம் 2020.05.19 ஆம் திகதிய ரீஓ/ஆர்ஈவீ/ரீஜீ /361/3 ஆம் இலக்க குறிப்பின் கீழ் திறைசேரி நட்டஈடு செல்லுபடியாகும் காலத்தை 2019.07.30 முதல் 2020.07.30 வரை நீடித்து வழங்கியிருந்தது.<br><br>இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் ரீஜீ ரீஓ/ஆர்ஈவீ/ரீஜீ/536 இன் ஆரம்ப காலாவதி திகதி 2020.10.08 ஆக உள்ளதுடன் அது நிதி அமைச்சால் வழங்கப்பட்ட 2020.10.23 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 2021.01.08 வரை நீடிக்கப்பட்டுள்ளது. | |
| (v) | 2008 இன் 03 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரையின் பிரகாரம் கடன் பெறுபவரின் திருப்பிச் செலுத்தும் திறனைப் பாதிக்கும் சூழ்நிலைகள் காரணமாக இணங்கப்பட்ட காலப்பகுதியின் பிரகாரம் முழுமையாக அறவீடு செய்யும் தன்மை சந்தேகத்திற்குரியதாக உள்ள போது செயற்பாட்டிலுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்களைச் செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களாக வங்கி வகைப்படுத்தும். எனினும், கடன் அபாயத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் பின்வரும் வாடிக்கையாளர்களை வங்கி சரியான வகைக்குள் வகைப்படுத்தியிருக்காதமை அவதானிக்கப்பட்டது. விபரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. | மிஹின் லங்கா வட்டி உட்பட மொத்த பொறுப்புக்களை உள்ளடக்கிய திறைசேரி உத்திரவாதத்தால் கடன்கள் பாதுகாக்கப்படுவதால் வங்கி வாடிக்கையாளரை வகைப்படுத்தியிருக்கவி | 2008 இன் 03 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் வாடிக்கையாளர்களை |

| வாடிக்கையாளர் பெயர் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை மீதி | குறிப்புக்கள் |
|---|---|---|
| ------------ | ---------- | ---------------- |
| | (ரூபா. மில்லியன்) | |
| மிஹின் லங்கா | 2,763 | இரண்டு முறைக்கு மேல் மறுசீரமைக்கப்பட்டவை நிலை 3 இற்கு வகைப்படுத்தப்பட வேண்டும். எனினும் அரசாங்க FCY வெளிப்படுத்தல் வகையின் கீழ் வங்கி நிலை 2 இற்கு வகைப்படுத்தியிருந்தது. |
| அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | 2,652 | SEC தொடர்ந்து பல நிதி சிக்கல்களை எதிர்கொண்டதுடன் அதே தொகைக்கு திறைசேரி உத்தரவாதத்திற்கு எதிராக ரூபா 2,000 மில்லியன் காலக் கடன் வசதியை வழங்கியதன் மீது ரூபா 566.9 மில்லியன், POD 150 மில்லியன் மற்றும் ரூபா 50 மில்லியன் TOD ஆகியவற்றை இரத்து செய்தது. கணிசமானளவு கடன் அபாயம் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் செயற்பாடற்ற வகையாக வகைப்படுத்தப்பட வேண்டும். |

ல்லை.

அரச பொறியியல் கூட்டுத்தாபனம் வட்டி உட்பட மொத்த பொறுப்புக்களை உள்ளடக்கிய திறைசேரி உத்திரவாதத்தால் கடன்கள் பாதுகாக்கப்படுகின்றன. எனினும், எஸ்எல்எவ்ஆர்எஸ் 9 இற்கு இணங்க வங்கி தற்போதுள்ள வசதிகளின் வட்டி பகுதியை நட்டக்கழிவிட்டிருந்தது.

சரியான வகையாக வகைப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| (vi) தொழில்முயற்சி இலங்கை கடன் திட்டத்தின் செயற்பாடற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து கடன் விகிதத்துடன் சேர்த்து மானிய விகிதத்தை அறவீடு செய்வது அவசியமாகும். எனினும் 2030 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் வட்டி விகிதம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறைமையில் மாற்றப்பட்டிருக்கவில்லை. அதே போல் 36 செயற்பாடற்ற வாடிக்கையாளர்களின் வட்டி விகிதம் முறைமையில் முதலில் அறவிடப்பட்ட விகிதத்தை விட குறைவடைந்துள்ளது. | கிளைகள் நாளாந்த அடிப்படையில் இவ் விடயத்தை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதால், பொறிமுறை இப்போது நடைமுறையில் உள்ளது. 2021.11.12 இல் உள்ளவாறு வட்டி விகிதம் மாற்றப்பட்டிருக்காத | முதலில் இணங்கப்பட்டவாறு தொழில்முயற்சி இலங்கை கடன் திட்டத்தின் செயற்பாடற்ற வாடிக்கையாளர்களிடமிருந்து கடன் விகிதத்துடன் |

| | |
|---|---|
| NPA கடன் கணக்குகளின் எண்ணிக்கை 1,101 ஆகும், அவை அனைத்தும் இப்போது ஒழுங்காக உள்ளன. | சேர்த்து மானிய விகிதத்தை அறவீடு செய்வதற்கு பரிந்துரைக்கப் படுகிறது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் | பின்வரும் காலப்பகுதிகளில் இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் குறைந்தபட்சம் 6 பணிப்பாளர் தேவைப்பாடுகளுக்கு வங்கி இணங்கவில்லை.<br>• 2020 சனவரி 1 – 2020 ஏப்ரல் 21<br>• 2020 திசெம்பர் 08 – 2020 திசெம்பர் 31 | இது வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாகும், ஏனெனில் செயற்படுத்தும் சட்டத்தின் பிரகாரம் வங்கியின் பொறுப்பு அமைச்சரால் பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். தற்போதைய நிலையில், வாரியம் 6 இயக்குநர்களைக் கொண்டுள்ளது. | 1938 இன் 53 ஆம் இலக்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | 2007 இன் 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரை பிரிவு 3 (2) (iv) | 2020 சனவரி 01 முதல் 2020 சனவரி 13 வரையான காலப்பகுதியில் குறைந்தபட்சம் 3 எண்ணிக்கையிலான சுயாதீன பணிப்பாளர் தேவைப்பாடுகளுடன் வங்கி இணங்கியிருக்கவில்லை. | இது வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விஷயம், ஏனெனில் செயல்படுத்தும் சட்டத்தின்படி வங்கியின் பொறுப்பு அமைச்சரால் இயக்குநர்கள் நியமிக்கப்படுவார்கள். தற்போது சபை 3 சுயாதீன பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. | 2007 இன் 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரையின் 3(2)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

### 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (2) ஆம் பந்தியின் பிரகாரம் IRD இன் தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் அரச உடமையாக்கப்பட்ட தொழில்முயற்சிகளின் ஊழியர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரி, வரிக்கு உட்பட்ட ஊழியர்களின் வருமானத்தில் இருந்து கழிக்கப்பட வேண்டும். எனினும், வங்கிக்கும் இலங்கை வங்கியின் ஊழியர் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கை ஊழியர்களின் வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்காமல் வங்கியால் செலுத்துமாறு அறிவுறுத்துகிறது. அதன் அடிப்படையில், 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஊழியர்களின் உழைப்புக்களில் இருந்து கழிக்காமல் ஊழியர்களின் சார்பில் வங்கி ரூபா 22,324,700 தொகையை உழைக்கும் போதே செலுத்தும் வரியாக செலுத்தியுள்ளது. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டன. | பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 17.8 பில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 23 பில்லியனாக காணப்பட்டதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 5.2 பில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நேரொத்த முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கடன் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான நட்டக்கழிவுக் கட்டணங்கள் ரூபா 12.6 பிலிலியனால் அல்லது 68 சதவீதத்தால் அதிகரித்துள்ளமை இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணமகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா. பில்லியன்) | வேறுபாடு % | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 5.8 | 3 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாணடில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்பு காரணமாக வட்டி வருமானம் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டிற்கான மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 466.4 பில்லியன் அல்லது 28 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ரூபா 466.4 பில்லியன் மொத்தக் கடன் அதிகரிப்பில் ரூபா 276.8 பில்லியன் நேரடி அரசாங்க மற்றும் SOEs இற்கான கடனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ரூபா 189.6 பில்லியன் மிகுதி அதிகரிப்பு தனியார் துறைக்கான கடனை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. |
| வட்டி செலவினம் | 6.2 | 4 | வைப்பு அடிப்படை அதிகரிப்பு மற்றும் வங்கியின் கடன்கள் காரணமாக வட்டிச் செலவினம் அதிகரித்துள்ளது. வங்கியின் வைப்பு அடிப்படை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 469.6 பில்லியன் அல்லது 23 சதவீதம் அதிகரித்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கடன்கள் ரூபா 76.1 பில்லியன் அல்லது 33 சதவீதம் அதிகரித்துள்ளது. கடன் அதிகரிப்பில் ரூபா 22.9 பில்லியன் மீள்கொள்வனவு (repo) கடன் அதிகரிப்பு, ரூபா 20 பில்லியன் மீள்நிதி கடன் அதிகரிப்பு, ரூபா 15 பில்லியன் உள்ளூர் பணச் சந்தை கடன் அதிகரிப்பு, ரூபா 7.7 பில்லியன் வெளிநாட்டு நாணய கடன் அதிகரிப்பு மற்றும் AT 1 மூலதன கருவியின் ரூபா 15 பில்லியன் புதிய கடன் ஆகியவை உள்ளடங்குகின்றன. |
| கடன் மற்றும் ஏனைய நட்டங்களிற்கான நட்டக்கழிவு கட்டணங்கள் | 12.6 | 68 | நிலை II மற்றும் III கடன் வெளிப்படுத்துகை அதிகரிப்பு, ஐ.அ.டொலர் மதிப்பிலான GOSL மற்றும் SOE வெளிப்படுத்துகை மீதான மேலதிக நட்டக்கழிவு, சுற்றுலா மற்றும் நிர்மாணம் போன்ற அபாயகரமான உயர் தொழில்கள் மீதான நட்டக்கழிவு ஏற்பாடு அதிகரிப்பு மற்றும் வங்கியின் கடன் போர்ட்போலியோ அதிகரிப்பின் காரணமாக நிலை I நட்டக்கழிவு ஏற்பாடு அதிகரிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆகியவற்றின் காரணமாக பிரதானமாக நட்டக்கழிவு கட்டணம் அதிகரித்துள்ளது. |
| வருமான வரி | (0.8) | (12) | 2019 திசெம்பர் மற்றும் 2020 சனவரி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் முறையே NBT மற்றும் DRL இரத்துச் செய்யப்பட்டதால் வருமான வரிச் செலவினம் குறைவடைந்துள்ளது. |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| விபரம் | துறை விகிதம் * | வங்கி 2020 | வங்கி 2019 |
|---|---|---|---|
| **செயலாற்றல் விகிதங்கள்** | | | |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 10.9 | 11.9 | 16.8 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.0 | 0.9 | 1.3 |
| வட்டி எல்லை | 3.1 | 2.8 | 3.3 |
| **சொத்து தர விகிதம்** | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பிஎல்) | 4.7 | 4.8 | 4.8 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |
| தட்டு 1 மூலதனம் (ஆகக் குறைந்தது 9%) | 13.1 | 11.2 | 11.2 |
| மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 13%) | 16.7 | 14.9 | 15.6 |
| **நியதிச்சட்ட விகிதம்** | | | |
| திரவச் சொத்து விகிதம் (உள்நாடு) (ஆகக் குறைந்த தேவைப்பாடு 20%) | 33.8 | 26.6 | 24.6 |

* துறை விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியால் பிரசுரிக்கப்பட்ட வருடாந்த புள்ளிவிபரங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு பிரிவின் புலனாய்வுப் பிரிவினால் வழங்கப்பட்ட விசாரணை அறிக்கைகள் வங்கியில் இடம்பெற்ற | | |

| | | | |
|---|---|---|---|
| | முக்கிய மோசடி மற்றும் நட்ட சம்பவங்களை தொடர்ந்து வெளிப்படுத்தியுள்ளன. | | |
| (i) | பிபில கிளையின் கிளை முகாமையாளர், தனியார் கம்பனியில் பணிபுரியும் 29 ஊழியர்களின் பெயர்களில் அவர்களுக்குத் தெரியாமல் 29 கடன் கணக்குகளைத் திறந்துள்ளார். அந்த கடன் கணக்குகளை திறப்பதற்காக கிளை முகாமையாளர் போலி ஆவணங்களை உருவாக்கி தனியார் கம்பனியின் உரிமையாளருக்கு ரூபா 14.5 மில்லியன் தொகையை வழங்கியுள்ளார். அதே போல் தவணைப்பணங்கள் செலுத்தாததன் காரணமாக அக் கடன்கள் செயற்பாடற்ற கடன்களாக வகைப்படுத்தப்படுவதை தடுப்பதற்கு முகாமையாளர் தனது இரகசியக்குறியீட்டை பயன்படுத்தி முறைமையை மாற்றியுள்ளார். | புலன் விசாரணை பூர்த்தியடைந்திருந்தது. அனைத்து கடன் ஆவணங்களும் பதிவேற்றப்பட வேண்டிய முறைமையில் ஆவண முகாமைத்துவ முறைமையை (DMS) அமுல்படுத்துவதன் மூலம் கடன் தொடங்கும் செயன்முறை தற்போது தானியக்கப்பட்டிருப்பதால் இவ் வகையான சம்பவங்கள் நிகழும் வாய்ப்பு குறைக்கப்படுகிறதுடன் பொருந்தக்கூடிய பிரதிநிதித்துவ அதிகாரத்தின் பிரகாரம் பயன்படுத்துநர் சுயவிபரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் கிளையின் உள்ளக கட்டுப்பாட்டு உத்தியோகத்தரின் (ICO) சுயாதீன சரிபார்ப்பின் மூலம் மாத்திரமே DMS இல் வேலை செயற்பாடு பூர்த்தி செய்யப்படும்.<br><br>மேலும் உளளக கணக்காய்வு பிரிவின் IS கணக்காய்வு பிரிவு நாளாந்தம் bucket அனுமதி முயற்சிகளைக் கண்காணித்து, கிளை முகாமையாளர், பிரதேச முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் ஆகியோருக்குப் பொருந்தும் வகையில் நாளாந்த அடிப்படையில் அறிக்கையை வழங்குகிறது. | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | லேக்வியூ கிளையின் கடன் உத்தியோகத்தர் போலி கையெழுத்து மற்றும் போலி அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்தி தனது தாயின் பெயரில் 14 போலி கடன் கணக்குகளையும் சேமிப்புக் கணக்கு ஒன்றையும் உருவாக்கியுள்ளார். அவர் 14 போலி கடன் கணக்குகள் மீது ரூபா 7,147,000 தொகையை செலுத்தி அந்த பணத்தை உருவாக்கிய சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்துள்ளார். பின்னர், தனது தாயின் பெயரில் போலியாக பணம் மீளப்பெறுவதற்கான சீட்டுக்களை உருவாக்கி சேமிப்பு கணக்கில் இருந்த பணத்தை மீளப்பெற்று அந்த பணத்தை தனிப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தியுள்ளார். | புலன் விசாரணை பூர்த்தியடைந்திருந்தது. அனைத்து கடன் ஆவணங்களும் பதிவேற்றப்பட வேண்டிய முறைமையில் ஆவண முகாமைத்துவ முறைமையை (DMS) அமுல்ப்படுத்துவதன் மூலம் கடன் தொடங்கும் செயன்முறை தற்போது தானியக்கப்பட்டிருப்பதால் இவ் வகையான சம்பவங்கள் நிகழும் வாய்ப்பு குறைக்கப்படுகிறதுடன் பொருந்தக்கூடிய பிரதிநிதித்துவ அதிகாரத்தின் பிரகாரம் பயன்படுத்துநர் சுயவிபரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும் கிளையின் உள்ளக கட்டுப்பாட்டு உத்தியோகத்தரின் (ICO) சுயாதீன சரிபார்ப்பின் மூலம் மாத்திரமே DMS இல் வேலை செயற்பாடு பூர்த்தி செய்யப்படும்.<br><br>மேலும் உளளக கணக்காய்வு பிரிவின் IS கணக்காய்வு பிரிவு நாளாந்தம் bucket அனுமதி முயற்சிகளைக் கண்காணித்து, கிளை முகாமையாளர், பிரதேச முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் ஆகியோருக்குப் பொருந்தும் வகையில் நாளாந்த அடிப்படையில் அறிக்கையை வழங்குகிறது. | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iii) | பாதுகாப்பு அமைச்சில் பணிபுரிவதாகக் கூறிய 5 கடன் பெறுபவர்களிற்கு அவர்களால் வழங்கப்பட்ட போலி ஆவணங்களை ஏற்று மருதானை கிளை | புலன்விசாரணை மற்றும் விசாரணை பூர்த்தியடைந்திருந்தது. OIC 319/2018 இற்கான 08 | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளை தடுப்பதற்கு போதுமான |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 6,525,000 தொகையான கடன்களை வழங்கியுள்ளது. கிளை பதவியணியினர் கடன் பெற்றவர்களால் வழங்கப்பட்ட ஆவணங்களின் சரியான தன்மையை சரிபார்த்திருக்கவில்லை அல்லது பாதுகாப்பு அமைச்சில் அவர்களது தொழிலை உறுதிப்படுத்தியிருக்கவில்லை, ஆகையால் இது தொடர்பாக அலட்சியமாக செயற்பட்டுள்ளனர். | வது திருத்தத்தின் கீழ், ஊழியர்களிற்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளை வங்கி வலுப்படுத்தியுள்ளது. கடன் உத்தியோகத்தர் உரிய தொழில்தருநர்களிடமிருந்து படிவம் 375 இன் மீள்-உறுதிப்படுத்தலைப் பெற வேண்டும். | நடவடிக்கைகளை தொடங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iv) | உத்தியோகத்தர் ஒருவர் நிக்கவெரட்டிய மற்றும் வாரியபொல கிளைகளில் பணிபுரியும் போது, கிளையின் ஏனைய பதவியணியினரை பிழையாக வழிநடாத்தி போலி ஆவணங்கள் மீது 3 நடைமுறை கணக்குகளையும் 2 சேமிப்புக் கணக்குகளையும் திறந்திருந்தார். காசாளரின் இரகசியக்குறியீட்டை தவறாகப் பயன்படுத்தி குறைந்தபட்ச வைப்புத் தொகையை மேற்படி கணக்குகளுக்கு மாற்றியுள்ளார், மேலும் நடைமுறைக் கணக்குகளுக்காக 3 காசோலை புத்தகங்களையும் பெற்றுள்ளார். மேலும் அவர் வங்கி பதவியணியினரிடம் போலி ஆவணங்களை வழங்கி 2 கடன் கணக்குகளை உருவாக்கியுள்ளார். வங்கியின் ரூபா 15.5 மில்லியன் பெறுமதியான சொத்துக்களை நிதி ஆபத்தில் வைப்பதற்கு அவர் பொறுப்பாக இருந்துள்ளார். | புலன்விசாரணை பூர்த்தியடைந்துள்ளது. ஆவண முகாமைத்துவ முறைமையை (DMS) அமுல்ப்படுத்துவதன் மூலம் கடன் தொடங்கும் செயன்முறை தற்போது தானியக்கப்பட்டிருப்பதால் இவ் வகையான சம்பவங்கள் நிகழும் வாய்ப்பு குறைக்கப்படுகிறது. மேலும், நாளொன்றில் திறக்கப்பட்ட அனைத்து கணக்குகளையும் தொடர்ந்துவரும் நாளில் A வகுப்பு உத்தியோகத்தர் சரிபார்க்க வேண்டும். | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (v) | நுகேகொட கிளையானது தியானா மல்டி (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு ரூபா 328.648 மில்லியன் தொகையான கடனையும், கஜபா சிட்டி சென்ரருக்கு ரூபா 684 மில்லியன் தொகையான கடனையும் வழங்கியுள்ளது. இந்த இரண்டு நிகழ்வுகளிலும், கிளையின் உத்தியோகத்தர்கள் அவர்களது கடமைகளைச் சரியாக செய்திருக்காததுடன் கடன் வழங்குதல் மற்றும் பின்னரான கண்காணிப்புச் செயன்முறையில் பல முறைகேடுகள் அவதானிக்கப்பட்டன. இக் கடன்கள் முறையே 2018 மே 31 மற்றும் 2020 சனவரி 20 இல் NPL வகைக்கு மாற்றப்பட்டன. தியானா மல்டி | புலன் விசாரணை நடைபெற்று வருகிறது மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு மேற்தரக் கிளையிலும் ICO ஒருவர் வேலைக்கமர்த்தப்பட்டு முறையான பிரதிநிதித்துவ அதிகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் கஜபா சிட்டி சென்ரரின் மொத்த நிலுவை மீதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 476.446 மில்லியன் மற்றும் ரூபா 834.407 மில்லியன் ஆக காணப்பட்டன. | | |
| (vi) | தனமல்வில கிளையின் பதவியணி உறுப்பினர் ஒருவர் 2020 பெப்ரவரி 05 முதல் 2020 மார்ச் 10 வரையான காலப்பகுதியின் போது ஐந்து சந்தர்ப்பங்களில் ரூபா 15.95 மில்லியன் தொகையை மோசடியான முறையில் எமது கிளையின் மத்திய அலுவலகக் கணக்கிற்கு வரவு வைத்து நெருங்கிய உறவினர்களின் 05 சேமிப்புக் கணக்குகளில் குறித்த நிதிகளை செலவு வைத்துள்ளார். எல்லா கணக்குகளிலிருந்தும் செலவு வைக்கப்பட்ட தொகைகள் உத்தியோகத்தரால் அவ்வப்போது மீளப்பெறப்பட்டிருந்தது. மேலும் இந்த உத்தியோகத்தர் போலியான ஆவணங்களை கொடுத்து 3 உறவினர்களின் பெயரில் ரூபா 900,000 கூட்டுமொத்த தொகையான 3 கடன்களை பெற்றுள்ளார். அந்த கடன்கள் முழுமையாக செலுத்தப்பட்டிருக்காததுடன் தற்போது NPL வகையில் உள்ளது. | புலன்விசாரணை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு கிளையிலும் மாத இறுதி G/L கணக்கு சமப்படுத்தலிற்காக நன்கு நிறுவப்பட்ட செயன்முறை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இது மாகாணத்தின் செயற்பாட்டு முகாமையாளரால் கண்காணிக்கப்படுகிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் A மற்றும் B வகுப்பு உத்தியோகத்தர்கள் பதிவு செய்வதற்கு முன்னர் G/L வரவு உறுதிச்சீட்டில் கையெழுத்திட வேண்டும். | எதிர்காலத்தில் இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளை தடுப்பதற்கு போதுமான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (vii) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது 4 வாடிக்கையாளர் கணக்குகளில் இருந்து ரூபா 283.1 மில்லியன் தொகையான 22 தவறான CEFT கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. முக்கிய வங்கியியல் முறைமையுடன் தொடர்புகொள்பவருக்கு கொடுக்கல்வாங்கல் விபரங்களை மாற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட "EFT சேவை" மென்பொருளில் (உள்ளேயே உருவாக்கப்பட்ட IT மென்பொருள்) தோன்றிய "முறைமை பிழை" காரணமாக தவறான CEFT கொடுக்கல்வாங்கல்கள் ஏற்பட்டன. இந்த பிழையான CEFT கொடுக்கல்வாங்கல்கள் நாளாந்த அடிப்படையில் இலத்திரனியல் வங்கிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட | விசாரணை பூர்த்தியடைந்துள்ளது. வங்கி CEFT கணக்கிணக்க பிரிவை நிறுவியுள்ளதுடன் நாளாந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கணக்கிணக்க செயன்முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. | எதிர்காலத்தில் இதுபோன்ற தவறான கொடுக்கல்வாங்கல்களைத் தவிர்ப்பதற்கு மிகவும் சரியான, பயன்படுத்துநர் நட்பு கணக்கிணக்க முறைமையை உருவாக்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

கணக்கிணக்க செயன்முறையின் போது கண்டறியப்பட்டிருக்கவில்லை.

புதிய parking கணக்கு கட்டமைப்பைப் பயன்படுத்தி மிகவும் சரியான, பயன்படுத்துநர் நட்பு மற்றும் பல்துறை கணக்கிணக்க முறைமையை உருவாக்குவதற்கு 2018 ஆம் ஆண்டு முதல் இலத்திரனியல் வங்கிப் பிரிவு மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவு அதிகாரிகளுக்கு இடையே கலந்துரையாடல்கள் நடைபெற்று வந்த போதிலும் 2020 மே மாதத்தில் குறித்த பிழையான கொடுக்கல் வாங்கல்கள் ஏற்படும் வரை தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் முன்மொழியப்பட்ட அபிவிருத்தியை பூர்த்திசெய்ய முடியவில்லை. உயர் பெறுமதியான பிழையான கடன் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விழிப்புணர்வுகள் AML Clari5 முறைமை மூலம் உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அந்த கிளைகளில் உள்ள உத்தியோகத்தர்களால் அக் கொடுக்கல் வாங்கல்கள் வழக்கத்திற்கு மாறானவை அல்லது சந்தேகத்திற்குரியவை என இனங்காண முடியவில்லை. ஒவ்வொரு வாடிக்கையாளரின் கணக்கிலும் தவறாக செலவு வைக்கப்பட்ட அனைத்துத் தொகைகளும் முழுமையாக அறவீடு செய்யப்பட்டு எதிர்காலத்தில் சாத்தியமான அனைத்து சூழ்நிலைகளையும் சரிசெய்து மென்பொருள் மாற்றியமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | CBSL இன் வங்கிக் மேற்பார்வை பிரிவால் 2018 சனவரி 18 ஆம் திகதிய அவரது கடிதத்தின் மூலம் BOC கட்டளைச்சட்டத்தின் முன்மொழியப்பட்ட திருத்தத்தை பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் விரைவாக அமுல்ப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வங்கி மேற்பார்வையின் பணிப்பாளர் 2018.02.18 ஆம் திகதிய அவரது கடிதத்தின் மூலம் BOC இன் பொது முகாமையாளரை 11/2007 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரைக்கு இணங்க முன்மொழியப்பட்ட திருத்தத்தை விரைவாக அமுல்ப்படுத்துமாறு | BOC கட்டளைச்சட்டத்திற்கு மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கு CBSL ஆல் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

வழங்கப்பட்டுள்ளன.

- வங்கியின் வளர்ச்சி மற்றும் சிக்கலான தன்மையை எளிதாக்கும் நோக்கில் கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான 2007 இன் 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரைக்கு இணங்க பணிப்பாளர்களின் எண்ணிக்கையை போதுமானளவு அதிகரித்தல்.
- வங்கித்துறை வல்லுநர்கள் மற்றும் பல்வகைத் திறன்களைக் கொண்ட ஏனைய தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைச் சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல், மற்றும்
- அதன் செயற்திறனான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில் சபையின் துணைக்குழுக்களுக்கு போதுமான எண்ணிக்கையிலான பணிப்பாளர்களை ஒதுக்குதல்.

BOC கட்டளைச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவுக்கு முன்மொழியப்பட்ட திருத்தம் பணிப்பாளர்களின் எண்ணிக்கையை ஆறில் இருந்து எட்டாக அதிகரித்திருந்த போதிலும் வங்கித் துறை நிபுணர்கள் மற்றும் பல்வகைத் திறன்களைக் கொண்ட ஏனைய தொடர்புடைய துறைகளைச் சேர்ந்த நிபுணர்களை நியமனம் செய்வதற்கு அறிவுறுத்தியிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

அதற்குப் பதிலாக, வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்குப் அறிவுறுத்தினார்.

அதன் பிரகாரம் பல கூட்டங்களுக்குப் பின்னர் வங்கியின் பணிப்பாளர் சபையிடமிருந்து (BOD) அங்கீகாரத்தை பெற்ற பின்னர் அப்போதைய BOC தலைவர் BOC கட்டளைச்சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்களை 2019.10.19 ஆம் திகதிய அவரது கடிதத்தின் மூலம் பணிப்பாளர் - CBSL இன் வங்கி மேற்பார்வைக்கான பிரதியொன்றுடன் திறைசேரி செயலாளருக்கு பரிந்துரைத்திருந்தார். அதனைத் தொடர்ந்து, 2020.06.02 இல் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளருடன் (சட்டம்) நடாத்திய கூட்டமொன்றில் வங்கியின் தற்போதைய BOD முன்மொழியப்பட்ட திருத்தங்களுடன் உடன்படுகிறதா என்பதை உறுதிப்படுத்துமாறு பணிப்பாளர் (சட்டம்) வங்கியிடம் கோரியுள்ளார். அதற்கிணங்க, சட்ட பிரிவு பணிப்பாளர் சபையிடம் 2020.06.10 ஆம் திகதிய விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பித்துள்ளதுடன் 2020.08.13 இல் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவன அடங்கிய புதிய திருத்த முன்மொழிவை சமர்ப்பிக்குமாறு சபை கோரியுள்ளது;

1) 11/2007 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரையின் பிரகாரம் இலங்கையின் CBSL ஆல் கோரப்பட்ட திருத்தம் மாத்திரம். மற்றும்
2) கட்டளைச் சட்டம் பழைய சட்டமாக இருப்பதால்

பொருத்தமானதாகவும் விரும்பத்தக்கதாகவும் கருதப்படும், பொருத்தமான திறன்கள் மற்றும் அனுபவங்களின் கலவையுடன் எட்டு பணிப்பாளர்களைக் கொண்டிருக்குமாறு அறிவுறுத்துகிறது. BOC கட்டளைச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவுக்கு முன்மொழியப்பட்ட திருத்தங்கள் இன்னும் நிலுவையாக உள்ளன.

தற்போதுள்ள உட்பிரிவின் அர்த்தத்தில் பொருண்மையான மாற்றங்களை ஏற்படுத்தும் பிரிவுகளைத் திருத்தாமல் தேவையான ஏனைய திருத்தங்கள்

அதன் பிரகாரம் சட்ட பிரிவானது வங்கியின் கூட்டுத்தாப முகாமைத்துவ குழு (CMC) மற்றும் தற்போதைய BOD ஆகியவற்றிற்கு முன்மொழியப்பட்ட திருத்தத்தை மீண்டும் சமர்ப்பித்து முறையே 2020.10.21 இல் CMC இடமிருந்தும் 2020.11.05 இல் BOD இடமிருந்தும் அங்கீகாரத்தை பெற்றிருந்தது.

தலைவர் BOC, திருத்தப்பட்ட முன்மொழிவை 2020.12.09 ஆம் திகதிய அவரது கடிதத்தின் மூலம் திறைசேரி செயலாளரிடம் மீண்டும் சமர்ப்பித்துள்ளார்.

அதன் பின்னர் 11/2007 ஆம் இலக்க CBSL பணிப்புரைக்கு இணங்க முன்மொழியப்பட்ட திருத்தத்தில் அதிகரிக்கப்பட வேண்டிய பணிப்பாளர்களின் எண்ணிக்கையை உள்ளடக்கி BOC தலைவரால் அனுப்பப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக சில விளக்கங்களைக் கோரி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் 2021.03.02 ஆம் திகதிய கடிதம் ஒன்றை இலங்கை வங்கியின் பொது முகாமையாளருக்கு முகவரியிட்டு அனுப்பியுள்ளார், அதன் பின்னர் அதிகரிக்கப்பட வேண்டிய பணிப்பாளர்களின் எண்ணிக்கை உட்பட பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விளக்கங்கள் தொடர்பாக சட்ட பிரிவு BOD இன் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

அதன் பிரகாரம் பணிப்பாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு வாசிக்கப்பட வேண்டுமென திருத்தப்பட்டுள்ளது;

***“சபையின் பணிப்பாளர்களின் எண்ணிக்கை 7 இற்கு குறைவாகவும் 13 இற்கு அதிகமாகவும் இருக்கக்கூடாது.”***

செயல்நடவடிக்கை திட்டத்தின் 2 ஆம் பக்கத்தில் உள்ள கடைசி பத்திக்கு பதிலளிக்கும் வகையில், BOC சபையில் பணிப்பாளர்களாக நியமனம் செய்யப்படுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்முறையை சேர்ப்பதற்கு வங்கி பரிந்துரைத்துள்ளது.

”**பணிப்பாளர்களில் ஒருவர்** நிதி விடயம் ஒதுக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் பிரதிநிதி ஒருவராக இருக்க வேணடியதுடன் (இனிமேல் ”முன்னாள அலுவலக பணிப்பாளர்” என குறிப்பிடப்படுகிறார்) **கணக்கீடு மற்றும்/ அல்லது கணக்காய்வில் தகைமைகள் மற்றும் அனுபவத்தை கொண்டுள்ள சுயாதீனமான நிறைவேற்றுத்தரம் அல்லாத பணிப்பாளராக மற்றொருவர் உள்ளார்.”**

எனவே, மேற்கூறிய திருத்தம் வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும்.

மேலும், BOC தலைவர் 2021.05.28 இல் மேற்கூறிய பரிந்துரைகள் உட்பட திறைசேரி செயலாளருக்கு பதிலை அனுப்பியுள்ளார்.

மேலும், BOC சட்ட பிரிவால் 2021.11.10 இல் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு பதிலளிக்கும் போது நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் (சட்டம்) அமைச்சரவைக்கு அவர்களின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட வேண்டிய BOC கட்டளைச்சட்டத்திற்கான அனைத்து முன்மொழியப்பட்ட திருத்தங்களையும் உள்ளடக்கிய அமைச்சரவைப் விஞ்ஞாபனத்தை தயாரிக்கும் செயன்முறையில் அவர் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவித்தார்.

### 3.3 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியின் போது வங்கியின் பல்வேறு துறைகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பாக கணிப்பிடப்பட்ட செயற்பாடற்ற விகிதம் பின்வரும் அட்டவணையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி, நிர்மாணம், சுகாதாரப் பராமரிப்பு, சமூக சேவைகள் மற்றும் ஆதரவு சேவைகள் மற்றும் நுகர்வு ஆகியவற்றின் செயற்பாடற்ற விகிதங்கள் கடந்த மூன்று வருட காலப்பகுதியின் போது படிப்படியாக அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் அது தொடர்பான கட்டுப்பாடுகள் காரணமாக ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளது, பல துறைகளின் கடன் தரத்தை மோசமடையச் செய்யும் எதிர்மறை தாக்கங்களானது உற்பத்தி, நிர்மாணம், சுகாதார பராமரிப்பு, சமூக சேவைகள் மற்றும் ஆதரவு சேவை துறைகள் ஆகியவற்றில் காணப்படுகின்ற NPA அதிகரிப்புடன் நேரடியாக தொடர்புபடுகின்றன. | துறையின் NPA விகிதங்கள் மற்றும் வங்கியின் ஒட்டுமொத்த NPA விகிதத்தைக் குறைப்பதற்கு ஒவ்வொரு சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| துறை | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | % | ரூபா மில்லியன் | % | ரூபா மில்லியன் | % |
| விவசாயம், வனவியல் & மீன்பிடி | 10,879.17 | 20.24 | 18,486.70 | 23.97 | 17,877.50 | 12.96 |
| உற்பத்தி | 10,034.85 | 18.67 | 13,222.64 | 17.14 | 27,767.11 | 20.13 |
| சுற்றுலா | 2,330.36 | 4.34 | 3,902.11 | 5.06 | 5,418.22 | 3.93 |
| போக்குவரத்து & களஞ்சியப்படுத்தல் | 668.47 | 1.24 | 802.75 | 1.04 | 1,446.82 | 1.05 |
| நிர்மாணம் | 4,615.41 | 8.59 | 10,201.13 | 13.23 | 18,488.91 | 13.40 |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 1,921.91 | 3.58 | 2,418.21 | 3.14 | 4,137.09 | 3.00 |
| மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம் | 11,309.35 | 21.04 | 14,698.53 | 19.06 | 28,865.15 | 20.93 |
| தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் சேவைகள் | 995.48 | 1.85 | 1,034.95 | 1.34 | 1,391.59 | 1.01 |
| நிதி சேவைகள் | 189.46 | 0.35 | 654.23 | 0.85 | 995.79 | 0.72 |
| உயர்தொழில், விஞ்ஞானவியல் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகள் | 107.96 | 0.20 | 125.41 | 0.16 | 216.49 | 0.16 |
| கலை, உபசரணை & பொழுதுபோக்கு | 597.28 | 1.11 | 65.78 | 0.09 | 151.09 | 0.11 |
| கல்வி | 86.78 | 0.16 | 82.37 | 0.11 | 422.15 | 0.31 |
| சுகாதார பராமரிப்பு, சமூக | 693.85 | 1.29 | 2,373.57 | 3.08 | 9,314.01 | 6.75 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சேவைகள் & ஆதரவு சேவைகள் | | | | | | |
| நுகர்வு | 4,573.30 | 8.51 | 4,303.57 | 5.58 | 14,350.80 | 10.40 |
| நிதி அமைச்சிற்கான கடன் வழங்கல் | - | - | - | - | - | - |
| வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கடன் வழங்கல் | 4,750.46 | 8.84 | 4,761.06 | 6.17 | 7,094.51 | 5.14 |

அதிகரித்த வேலையின்மை, குறைவடைந்த வருமானம் ஆகியவை நுகர்வு பிரிவில் NPA அதிகரிப்பை தூண்டியுள்ளன.

வங்கியின் NPA விகிதம் 2019 இல் 4.79% இல் இருந்து 2020 ஆம் ஆண்டில் 4.76% வரை அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் 3 ஆம் காலாண்டில் இருந்து பொருளாதார நடவடிக்கைகள் மீண்டும் தொடங்கப்படுவதுடன் குறிப்பிட்ட துறைகளின் விகிதங்களும் தொற்றுநோய்க்கு முந்தைய நிலைகளுக்குத் திரும்புதல் தோல்வியடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வங்கியின் NPA ஐ குறைப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

- NPA மீளாய்வுக் குழுவின் கூட்டங்கள் வாராந்தம் CFO தலைமையில் நடைபெறுகின்றன . இது கூட்டுத்தாபன மற்றும் மாகாண பிரிவுகளின் NPA

வசதிகளை உள்ளடக்குகிறது.

- BPRU ஆனது அறவீட்டு மாகாண பிரிவில் நிறுவப்பட்டுள்ளது.

DGM அறவீடு (கூட்டுத்தாபனம்) உடன் சாத்தியமான NPA/ watch list வாடிக்கையாளர்களைப் பற்றி ஒவ்வொரு தொடர்பு உத்தியோகத்தருடனும் தனிப்பட்ட கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.

(ii) பின்வரும் அட்டவணையானது கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியின் போது வங்கியின் நிலை III நட்டக்கழிவு கடன் விகிதம் மற்றும் மொத்தச் செயற்பாடற்ற கடன் விகிதத்தை சித்தரிக்கின்றது. நிலை III நட்டக்கழிவு கடன்கள் அதிக NPA விகிதத்திற்காக கணக்கீடு செய்யப்பட்டமைக்கான சான்றாகும், இது வங்கியின் ஒழுங்குமுறை NPL விகிதத்தை விட மிகவும் அதிகமாக உள்ளது.

| விபரம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| ---------- | 2020 | 2019 | 2018 |
| | -------- | ------- | ------------ |
| மொத்த கடன் மற்றும் முற்பணங்கள் | 2,115, 204,744 | 1,648,760,589 | 1,510,534,078 |
| நிலை III கடன் மற்றும் முற்பணங்கள் | 207,523,942 | 166,687,234 | 137,215,336 |
| மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களிற்கான நிலை III கடன்களின் (%) | 9.81 | 10.11 | 9.08 |
| செயற்பாடற்ற முற்பணம் | 98,564,000 | 77,133,000 | 53,754,000 |
| மொத்தச் செயற்பாடற்ற முற்பண விகிதம் (%) | 4.8 | 4.8 | 3.6 |

கருத்துரை குறித்துக் கொள்ளப்பட்டது ஒழுங்குமுறை NPAs நிலுவையாக உள்ள முற்பணங்களின் கடந்த நாட்களின் அடிப்படையில் இனங்காணப்படுகின்றன. அதேநேரம், முற்பணங்கள் நிலுவையாக உள்ளதால், கடந்த நாட்களை மட்டுமின்றி, முற்பணத்தின் நட்டக்கழிவை பாதிக்கும் பல ஏனைய தொடர்புடைய காரணிகளையும் கருத்தில் கொண்டு நட்டக்கழிவு கடன்கள் இனங்காணப்படுகின்றன.

வங்கியின் நிலை III நட்டக்கழிவு கடன் விகிதங்களைக் குறைப்பதற்கு திருப்திகரமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 ஆம் ஆண்டிற்கான வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 10,356 ஊழியர்களாக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறான பதவியணியினர் 9,927 ஆக காணப்பட்டதுடன், இதில் 8,477 நிரந்தர பதவியணியினரும் 1,450 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களும் உள்ளடங்குகின்றனர். ஆகையால் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 429 பதவிகள் வெற்றிடமாக உள்ளன. | BOD இன் அங்கீகாரத்துடன் வங்கி அவ்வப்போது வெற்றிடப் பதவி நிலைகளை நிரப்புகிறது. எதிர்கால ஆட்சேர்ப்பு எதிர்வுகூறல்கள், போதுமான தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் கிடைப்பனவு போன்றவற்றை பதவி உயர்வுகள் மற்றும் வெற்றிட பதவிநிலைகளின் எண்ணிக்கை தவிர்ந்த ஆட்சேர்ப்புக்களிற்காக கோரும் போது நாங்கள் கருத்தில் கொள்கிறோம். | வங்கிச் செயற்பாடுகள் சீராக நடைபெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு வெற்றிட பதவிநிலைகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | 429 மொத்த வெற்றிடங்கள் கூட்டுத்தாபன மட்டத்திலிருந்தான 2 வெற்றிடங்களையும், நிறைவேற்று மட்டத்திலிருந்தான 3 வெற்றிடங்களையும், செயற்பாட்டு மட்டத்திலிருந்தான 424 வெற்றிடங்களையும் உள்ளடக்குகின்றன. | வங்கி 2021 இல் கூட்டுத்தாபன மட்டத்திலிருந்தான 2 வெற்றிடங்களையும், நிறைவேற்று மட்டத்திலிருந்தான 3 வெற்றிடங்களையும் நிரப்பியிருந்ததுடன் செயற்பாட்டு மட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவ பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்சி பதவியணி உதவியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கனவே கோரியுள்ளது. | |